பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

OCT 1997
மாநகராட்சி ...
யாழ்ப்பாண...

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 02 ஞாயிற்றுக்கிழமை [18-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:200

# போக்குவரத்துப் பாதை திறப்பதில் சர்வதேச சமூகம் உதவ வேண்டும்!

## புலிகள் கோரிக்கை

வவுனியா, ஜூலை 18

வன்னி மக்களின் தற்போதைய நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு மன்னார் உயிலங்குளம், பள்ளமடு வீதியை அல்லது யாழ். —கண்டி வீதியைத் திறப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அரசு நாம் ஏற்கமுடியாத நிபந்தனைகளை விதித்து வருகிறது. ஆகவே சர்வதேச சமூகம் வன்னி மக்களின் இந்த ஜீவாதாரப் பிரச்சினையில் தலையிட வேண்டும்.

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை குறித்து விடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னிப் பெருநிலப்பரப்பின் போக்குவரத்துக்கள் முற்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஒரு புறம் நிவாரணம் வெட்டு மறுபுறம் பாதை அடைப்பு சமாதான கோஷம் வெறும் கேலிக்கூத்து ... !

## காணாமற்போன பொலீஸார் இருவரும் சடலமாக மீட்பு

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு பாலமீன்மடுவில் விடுதலைப் புலிகளின் தாக்குதலின் பின்பு காணாமல் போன இரு பொலீஸ் கான்ஸ்டபிள்களும் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இம்மோதலில் இரு பொலீஸார் பலியானார்கள்.

மேலும் இரு பொலீஸார் காணாமல் போனார்கள்.

இந்த இருவரின் சடலங்களும் மட்டிக்கழி, பெரிய உப்போடை வாவி ஓரங்களில் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டன. (இ-21)

## வெள்ளைவானில்வந்தோர் கடத்தியதாக முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

கடந்த 13 ஆம் திகதி காணாமல் போன தனது கணவன் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப் பட்டார் என யாழ். கந்தர் மடத்தைச் சேர்ந்த திருமதி கவிதா செறிங்ரன் என்பவர் நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

குருநகர் வைத்தியசாலையில் கடமையாற்றும் தம்மை ஏற்றிவருவதற்காக அன்றைய தினம் பி. ப. 2-30 மணிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அச்சத்தை நீக்குவதற்கு ராணுவம் உறுதிமொழி தர முடியாது

### பாதை திறப்பு குறித்து பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஜூலை 18

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை திறப்பதில் பாரதூரமான தந்திரோபாயங்களும் பாதகமான இராணுவச் சிக்கல்களும் இருப்பதாக விடுதலைப் புலிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். பிரிவினைவாதிகளுடன் யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா ராணுவம் புலிகளின் அச்சத்தைப் போக்க உறுதிமொழி வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

மேற்கண்டவாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப் படடிருப்பதாவது:-

வன்னியில் உள்ள விடுவிக்கப்படாத பகுதி மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்று முகமாக பொது மக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்குவது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து வசதி இன்றி மற்றொரு நோயாளி மரணம்

### வன்னியில் நிலைமை மோசம்

வவுனியா, ஜூலை 18

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை துண்டிக்கப் பட்டதினால் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டு செல்ல முடியாமல் நேற்று மல்லாவி மருத்துவமனையிலும் நோயாளி ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த 12 ஆம் திகதி வவுனியாவுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் நோயாளி ஒருவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

விநாயகர்புரத்தைச் சேர்ந்த பொன்னையா சதாசிவம் (வயது 57) என்பவரே மரணமானவராவார், (இ-5-9)

## மாங்குளத்தில் மோதல்

மாங்குளம், ஜூலை 18

மாங்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவதினம் பிற்பகல் 3.55 மணியளவில் விடுதலைப் புலிகளின் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தச் சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் என்றும் —

தாக்குதலின்போது இராணுவ தரப்பில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தரப்பில் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-9)

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

துப்பாக்கிச் சூடு மற்றும் கிரனேட் வெடிப்பினால் ஏற்பட்ட காயங்களுடன் இரு சடலங்கள் பளைப் பொலீஸாரினால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர்களது சடலங்கள் இனம் காணும் பொருட்டும் மரண விசாரணையின் பொருட்டும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு கடற்பகுதியில் கரையோரமாக நீந்திவந்து கொண்டிருந்த சமயமே இராணுவத்தினர் இவர்களை நோக்கி கிரனேட் வீச்சு நடத்தி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் வீச்சுக்கு உள்ளான சடலம் தலை சிதறிய நிலையிலும், மற்றைய சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் காணப்பட்டன. (இ-6-15)

## நிவாரண வெட்டை மறுபரிசீலனை செய்யுமாறு இணையம் கோரிக்கை

### ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் நிவாரணத்தை நிறுத்துவது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு பாரதூரமான பிரச்சினையாக இருக்கப் போகின்றது. இதனை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1996 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக வருமானத்தைப் பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்படவில்லை.

கொழும்பிலிருந்து தீர்மானிக்கும் அரச அதிகாரிகள் யாழ்ப்பாணத்துநிலைமையை புரிந்துகொள்ளாமல் செயற்பட்டு வருவதினாலேயே மேற்படி நிலை ஏற்பட்டுள்ளது.

[12 ஆம் பக்கம் பார்க்க]

## மல்லாவியில் போராட்டம்

நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து கடந்த இரு நாள்களாக மல்லாவியிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது.

வன்னிப் பகுதியில் நிவாரண நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.

நிவாரண நிறுத்தம் தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும்வரை இந்த மறியல் போராட்டம் தொடரும் என்று நிவாரண வெட்டினால் பாதிக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்தனர். (இ-5-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சண்முகநாதன்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தையிட்டி கணைவியற் பிள்ளையார் கோயிலின் தர்மகர்த்தாவுமான தம்பையா சண்முகநாதன் (Manager) 14-7-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சேதுப்பிள்ளையின் அருமை மகனும் கனகம்மா, பூரணம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும் சுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் சயந்தன், ஐமுகன், அத்திமுகன், சலசலோசனன், சதுமுகன், சதுர்புயன் ஆகியோரின் அருமைத் தந்தையும் மகாதேவா, மகாதேவி ஆகியோரின் மைத்துனரும் அம்பலவாணர், புவனேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (16-7-99) வெள்ளிக்கிழமையன்று வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. ஐமுகன்
(மகன்)

(67558)

## திருமதி செபஸ்ரியம்மா - பிரான்சிஸ்
### (தங்கப்பிரகாசம்)

ஊர்காவற்றுறையில் வசித்தவரும் தற்போது கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசித்து வந்தவருமான திருமதி செபஸ்ரியம்மா பிரான்சிஸ் (தங்கப் பிரகாசம்) 15-07-99 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்ரனி பிரான்சிஸ் (தங்கப் பிரகாசம்) அவர்களின் அன்பு மனைவியும். விமலா, ஸ்கொலஸ்ரிக்கா, ஜெரோம், யூக்கறிஸ்ரா, அருட்செல்வி கலிஸ்ரா (தி.கு.) கிளாரா, றோய். மறிஸ்ரெலா, அருட்செல்வி எவறிஸ்ரா (தி.கு), பொஸ்கோ, சாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். இவரது நல்லடக்கச் சடங்குகள் நாளை (19-07-99) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு கனத்தை சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
அருட்செல்வி கலிஸ்ரா,
திரு. ஏ. எவ். யே. ஜெரோம்

ஊர்காவற்றுறை,
(67544)

## தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ் (சந்திரா)
[இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி]

பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிராசா ஸ்ரனிஸ்லஸின் நல்லடக்கம் முன்னர் அறிவித்தபடி 16-7-99 வெள்ளிக்கிழமையன்று தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை.

அன்னாரின் பூதவுடல் இன்று [18-7-99] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு [புதிய நேரம்] அவரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி றோஸமலர் ஸ்ரனிஸ்லஸ்
(மனைவி)
சந்திரிக்கா, ரவிராஜ் (பிள்ளைகள்)

(67559)

## கனகரெட்ணம் தனபாலசிங்கம்

நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெட்ணம் தனபாலசிங்கம் 16-07-99 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரெட்ணம் - இரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யூடிவிக்காவன் அன்புக்கணவரும் சிவனேசன் [குமார் -வவுனியா], யூலியற் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும ஜெபலக்ஷ்மி, றமேஷ் [ஜேர்மனி], ஆகியோரின் மாமனாரும் தனலக்ஷ்மி [பிரான்ஸ்] இந்திராதேவி [கொழும்பு], யசோதராதேவி[கனடா], உருத்திரேஸ்வரன் [அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் சங்கரலிங்கம் [பிரான்ஸ்], சங்கரலிங்கம் [கொழும்பு], தயாபரன் [கனடா], றஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனரும், தினேஷின் பேரனும் காலஞ்சென்ற விசாலாட்சி, கிருபாகரன் கமலம் [பிரதம தாதி, யாழ். போதனா வைத்தியசாலை] ஆகியோரின் பெறாமகனும் சோமசுந்தரம், கமலா [முள்ளியவளை] ஆகியோரின் மருமகனும் சுஜனா கண்ணதாசன் [கனடா], சுபத்திரா நித்தியானந்தன் [பிரான்ஸ்], சுஜித்தா [பிரான்ஸ்], டனிஸ்பவன் [பிரான்ஸ்], சந்திரசேகர் [சுவிஸ்], கஜந்தினி முருகதாஸ் [பிரான்ஸ்] காலஞ்சென்ற யோகசேகரன், கஜசேகரன், அஜந்தசேகரன், இந்துஜன் [கனடா], பெனீற்றா [கனடா] ஆகியோரின் மாமனாரும் நிருஜா, இந்துஜா, கம்சினி. சோபினி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று[17-07-99] [illegible] நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி க. இரத்தினம் [தாயார்],
க. உருத்திரேஸ்வரன் [சகோதரன்]
[உருத்திரன்].

36/2 [82/7] செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[67538]

## ஆஸ்பத்திரிக்கு 24 மணிநேர மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு 24 மணிநேர மின்சார விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றியில் இருந்தே இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின்மாற்றி உள்ள இடத்தில் இருந்து ஆஸ்பத்திரி வரையான வீதியில் உள்ள குடியிருப்பாளர்களுக்கும் மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. [இ-15]


**Agent**
**தேவை**

Computers, Computer Parts, Printers போன்றவற்றை யாழ். நகரில் விற்பனை செய்யக் கூடிய முகவர் உடன் தேவை.

பெயர், முகவரி, Fax No, T. P. No. உடன் தொடர்பு கொள்ளவும்.

R R. Selvakumar
AIZEN
Computer Land.
No-07,57th Lane
Colombo - 06
T.P-556381 Fax: 596458
(சி/8178)

**விற்பனைக்கு**

6 அடி சுற்று உள்ள
30 அடி உயர வேப்பமரம்
5 துண்டுகளாகப்
போடப்பட்டது.
உடன் விற்பனைக்குண்டு.

47, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம்.
(67551)

**றீகல் டாக்கீஸ்**
ஈச்சமோட்டை.
11 மணி (பழைய நேரம்)
விஜய் நடித்த
துள்ளாத மனமும்
துள்ளும்
2-30 மணிக்கு
சாவித்திரி நடித்த
தேவதாஸ்
(67561)

**ராஜா**
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
அண்ணாமலை
10-30, 2-00, 5.00
நாளை முதல்
மின்சாரக் கனவு
[சி/8191]

**நாகம்ஸ்**
சுன்னாகம்
இன்று மட்டும்
பிரசாந் - ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
காட்சிகள் 11.00, 2.00
[புதிய நேரம்]
நாளை முதல்
பாண்டியன்
[67553]


## பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு 1997 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

இதில் வணிக முதல் தேர்வில் 33 பேரும் கலை முதல் தேர்வில் 206 பேரும் சித்தி அடைந்துள்ளனர். (இ-9-ரி)

## பாடசாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இரவு அதிபரின் அறைக்கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

றேடியோ, மாணவர்களின் சீருடைத்துணிகள் மற்றும் அலுவலகப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-9-ரி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பு வள்ளிப்பிள்ளை

கருகம்பனை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வளாக வீதி திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு வள்ளிப்பிள்ளை நேற்று முன்தினம் 16—07—99 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னத்தம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவராஜா, கமலாதேவி மற்றும் தாமோதரம்பிள்ளை, சரஸ்வதி, இராஜேஸ்வரி (கொழும்பு), லிங்கேஸ்வரி (கொழும்பு), அம்பிகாதேவி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் - தாய்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வே. நித்தியானந்தன் மற்றும் புனிதவதி. சிவராணி, சிவநேசன், கனகரஞ்சிதம், கமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-07-99) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நி. சரஸ்வதி
(மகள்)

வளாக வீதி,
திருநெல்வேலி.
தொலைபேசி இல. 2742
(67556)

## திருமதி இராசம்மா சங்கரலிங்கம்

மின்சார நிலைய வீதி சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா சங்கரலிங்கம் 15-07-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லர் நாகமுத்து ஆகியோரின் மருமகளும், சங்கரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, செல்லம்மா, நல்லம்மா சுப்ரமணியம், மற்றும் பவளமமா நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, ரத்தினம், மற்றும் பாக்கியம், கந்தசாமி (மலேசியா, கமலம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனியும் வளர்மதி (ஆசிரியை - அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), காந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-07-99 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:- எங்கள் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்தும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:-
காந்திமதி
(மகள்)

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.
(67547)

## திருமதி கமலாசனி இரத்தினசபாபதி

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி கமலாசனி இரத்தினசபாபதி அவர்கள் நேற்று (17-07-99) சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி பத்மாஷனி இராசசூரியரின் அன்புச் சகோதரியும் டாக்டர் இராசசூரியரின் (யூ. கே) மைத்துனியும் நடேசன் (Lanka Canneries Ltd), கணேசன் (Seychelles), சாந்தி, ஸ்ரீகாந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆர் என். வரேந்திரன் (ஆஸ்திரேலியா), இராசதுரை (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), பரமநாதன் (UNI Walkers) சிவசோதி, லத்தா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ஸ்கந்தராஜா, கணராஜா, சங்கரி, கஜன், கஜனி, சுதர்சினி, சுதர்சன் (உயர்தர கணித மாணவன் யாழ். மத்திய கல்லூரி), சியாம்சங்கர், விஜேய்சங்கர், தயாகரன், அகிலா, அனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-07-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ. இராசதுரை
[மருமகன்]
நல்லூர்

9, Ruwan Mawathe,
Colombo - 5
Tel: 592122
[67548]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி க. விஜிதா**
அவர்களின் அன்புக் கணவர்

**கருணாரட்ண**

அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம. வி.
ஊர்காவற்றுறை

(67521)

## புனரமைப்பு

புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் தரம் ஒன்று வகுப்பு மாணவர்களுக்கென நாற்பது அடி நீளமான வகுப்பறை 90 ஆயிரம் ரூபா செலவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

அண்மையில் ஜனாதிபதியினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தங்களில் தரம் ஒன்று வகுப்பு மறுசீரமைப்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இப்புனரமைப்பு வேலைகளைத் துரிதமாகச் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கேட்டுள்ளார். (ஐ-118-173)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
**அருட்சகோதரி கலிஸ்ரா பிரான்சிஸ்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பிரான்சிஸ் செபஸ்ரியம்மா**

அவர்களின் மறைவினையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.
ஊர்காவற்றுறை [67520]




சி/8215

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## விசேட அறிவித்தல்
### பரம்பரை அறங்காவலர் வெற்றிடம்

மேற்படி ஆலயத்தில் பரம்பரை
அறங்காவலராக இருந்த
**வேலுப்பிள்ளை
பொன்னம்பலம் இராசலிங்கம்**

அவர்கள் கடந்த 03-09-96 ஆம் திகதியன்று காலமாகி விட்டார். குறித்த திகதியில் இருந்து இந்த ஆலயத்தில் அவரது பரம்பரை அறங்காவலர் சபைக்கான உறுப்புரிமை வெற்றிடமாகவுள்ளது.

இந்த வெற்றிடத்துக்கு, காலஞ்சென்ற அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் இராசலிங்கம் அவர்களின் ஆண்வழித் தோன்றல்களில் ஒருவரோ, அவ்வாறு இல்லாதவிடத்து, அவரது ஆண்வழித் தோன்றல்களின் ஆண் இணை உரித்தாளர்களுள் ஒருவரோ, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு உறுப்புரிமை கோரி விண்ணப்பிக்கலாம் என இத்தால் அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு, (67512)

## நெஞ்சை விட்டகலா
## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 – 05 – 1924



விண்ணில் 29 – 06 – 1998

**அமரர் கந்தையா ஐயாத்துரை**
திதி: 18-07-1999

ஆண்டு ஒன்று போனாலும் எம்
நினைவில் என்றும் நிலைத்து நிற்கும்
அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனன்.

பிடாரி அம்மன் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (67490)

## மிற்சுயி, அட்லஸ் சிமெந்து விற்பனை

ரோக்கியோ சிமெந்து கம்பனியாரின்
[ MITSUI ] மிற்சுயி, [ ATLAS ] அட்லஸ் சிமெந்துகள்
ஒரிரு தினங்களில் வருகின்றன. ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்,

() MITSUI CEMENT () ATLAS CEMENT

தொடர்பு: **ஜெரியா ஏஜென்சி,**
**132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/8216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் சுருக்கெழுத்தாளராகப் பணியாற்றும்
செல்வி தர்ஷினி மோகனசுந்தரம்
அவர்களது தந்தையார்

## செல்லையா மோகனசுந்தரம்

அவர்களின் இழப்பை ட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்.

பிரதேச செயலகம்,
வலி.மேற்கு, சங்கானை. (67514)


# 2 ஆம் தவணைப் பரீட்சை நாளை

பருத்தித்துறை, ஜூலை 18

வடமராட்சி கல்வி வலய மட்டத்தில் இரண்டாம் தவணைக்கான பொதுப் பரீட்சை நாளை 19ஆம்திகதி முதல் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை இடை நிலை வகுப்புக்களான 2, 3, 4, 5, 10. 11 ஆகிய தரங்களுக்கு மட்டும்நடைபெறும். ஏனைய தரங்களான 6,7.8,9-க்கு பாடசாலை மட்டக் கணிப்பீடு மட்டும் நடைபெறும். தரம் 4, 5, 10, 11 ஆகியவற்றுக்கு விஞ்ஞான செய்முறைப் பரீட்சையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

'சீடா' விசேட செயற்றிட்டத்தின் கீழ் தரம் 11 மாணவர்களுக்குப் பரீட்சை நடத்தப்படமாட்டாது. எனவே சகல மாணவர்களும் வடமராட்சி வலயத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

(ஐ-118)


அராலி - கரைப்பிட்டி

## கணபதீஸ்வரன் ஆலயம் வருடாந்த திருவிழா

19-7-99 திங்கள் முதல் 28-7-99
புதன்கிழமை வரை

கொடியேற்றம்: 19 - 07 - 99 திங்கட்கிழமை
காலை 9 00 மணி
சப்பறம்: 26 - 07 - 99 திங்கட்கிழமை
தேர்: 27 - 07 - 99 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணி
தீர்த்தம்: 28 - 07 - 99 புதன்கிழமை
காலை 9.00 மணி

நாதாஞ்சலி R. சிவகுமார் குழுவினர்

- தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு:
கரைப்பிட்டி கணபதியின் கழல்தனைப்
பணிந்திடுவோம்.

புதிய சாந்தி
அரைக்கும் ஆலை
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
(67453)

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்
மதிய உணவுப்பொதிகளை
தாமதமின்றி
முற்பகல் 11 - 45 மணி
முதல் 2 45 மணி வரை
பெற்றுக் கொள்ளலாம்
விலைரூபா 35. 00 மட்டுமே
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரிமுன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சி-8210)




மூவ் இடுப்பு வலி, மூட்டு வலி.
முதுகு வலி, வீக்கம், தசைப்பிடிப்பு
என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.




இப்போது
25 / 50 கிராம
பேகருகளில
கிடைக்கிறது

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்.
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள். அழகு சாதன் கடைகள். சில்லறை கடைகள

[8051]

# AMBAL PHARMACY AND GROCERY
# அம்பாள் பார்மசி அன்ட் குறோசறி

இல. 1, நவீன சந்தை, சாவகச்சேரி. T. P. No. 070 - 212305

○ மருந்து வகை ○ பால்மா வகை ○ பாடசாலை உபகரணம் ○ பிஸ்கட் வகை
○ றேடியோ வகைகள் ○ எலக்ரோணிக் வகைகள்
○ ஆண்கள், பெண்களுக்கான உள்ளாடைகள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்
○ BATA செருப்புக்கள் ○ இறால், மாசிக் கருவாடுகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அம்பாள் போட்டோஸ்ரட், லமனேற்றிங் சேவை

அம்பாள் தொலைபேசிச் சேவை

உள்நாடு 070 - 212305 ஒரு நிமிடத்துக்கு 4-00 ரூபா
வெளிநாடு 0094 - 70 - 212305 குறைந்த கட்டணம்
உள்வரும் அழைப்புகள் அனைத்தும் இலவசம். தகவல்கள் உடனுக்குடன் அறிவிக்கப்படும்.

ALL KINDS OF PHARMACEUTICALS ITEMS
AND GROCERY DEALERS.

No. 1, NEW MARKET BUILDING, CHAVAKACHCHERI.
TELEPHONE: 070 - 212305

(C/8212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசியல் பண்பு பிறக்காதா?

தென்னிலங்கையில், இப்போது அரசியலில் சூடு பிடித்துள்ள விவகாரம், தான் வாக்குறுதி அளித்தவாறு நிறைவேற்று ஜனாதிபதி முறையை சந்திரிகா அரசாங்கம் நீக்காமல் இறுக அரவணைத்துள்ளது என்பதே.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்காததை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி கடந்த வியாழக்கிழமை கொழும்பு நகரில் நடத்திய பேரணி வன்செயலில் முடிந்ததால், இந்த விவகாரம் எங்கும் பேசப்படும் விடயமாகி விட்டது,

ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே. வி. பியும்) நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படாமையை ஆட்சேபித்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தது. குழப்பம் எதுவும் இடம்பெறவில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியும் இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று தனது மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது.

அரசாங்கத்தின் தவறைச் சுட்டிக் காட்டி உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் அரசுக்கு வாக்குச் சேராமல் தாம் கவருவதே ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. வி. பி. ஆகிய இரண்டினதும் நோக்கம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கமுடியாமைக்கு அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒத்துழைப்பு வழங்காமையே காரணம் என்ற நிலைப்பாட்டை —வாதத்தை — அரசாங்கத் தரப்பு முன்னிறுத்துகிறது.

மேலும் தானே அறிமுகப்படுத்திய நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கேட்பது பகிடிக்கு இடமானது என்பதும் அரச தரப்பின் வாதம்.

ஆனால் கொடுத்த வாக்குறுதிய நான்கு வருடங்களாக நிறைவேற்ற அரசு தவறிவிட்டது என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் வாதமாக உள்ளது.

இனப் பிரச்சினைக்கான அதிகாரப்பரவலாக்கல் யோசனையையும் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பதையும் அரசு ஒன்றாகக் குழைத்ததாலேயே தம்மால் ஒத்துழைக்கமுடியவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினர் கூறலாம் அல்லவா?

ஆனால் இந்த விடயத்தில் ஐ. தே. கட்சித் தலைவர்கள் இரண்டு கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். தமக்கிடையே ஏகோபித்த முடிவுக்கு வரமுடியாததாலேயே அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் அரசு தரப்புச் சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு இரு தரப்புகளும் வாதப்பிரதிவாதம் செய்வதுடன் மட்டுமல்லாது இதனை அடிப்படையாக வைத்து இப்போதே தேர்தலுக்கு முந்திய வன்முறைகளில் ஈடுபடவும், ஏட்டிக்குப் போட்டியாக நடந்துகொள்ளவும் முற்பட்டுள்ளன. இது ஆரோக்கியமான நிலையல்ல. இரண்டு கட்சிகளும் மாறி மாறிப் பதவிக்கு வருவதற்காக மக்களை இடையில் வைத்து அவர்களை ஏமாளிகளாக்குவதும் ஏமாற்றுவதும் இலங்கை அரசியலின் சிறப்பான குணாம்சம் ஆகிவிட்டது.

தேசியப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசியல் கட்சிகள் போட்டியின்றி, அரசியல் லாபம் கருதாமல், கருத்திணக்கம் கண்டு தீர்க்கும் பண்பு, வந்தால் மட்டுமே இந்த நாட்டுக்கு விடிவு வரும் இல்லையேல் அழிவும் நாசமுமே தொடரும்.

# வன்னி மக்கள் நிலைமை மிக மோசமான கட்டத்தில்

## மன்னார் ஆயர் கூறுகிறார்

வவுனியா, ஜூலை 18

''இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியின் நிலைமை மிக மிக மோசமாகவுள்ளது''

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்றபின்னர்நேற்றுமுன்தினம்மன்னார் திரும்பிய மன்னார் ஆயர் அதிவந். ராயப்பு யோசெப் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

''வன்னியில் மக்கள் படும் அவல நிலையை சொல்லில் வடிக்க முடியாது'' என்று தெரிவித்த ஆயர் அங்கு ஒரு கிலோ சீனி 100 ரூபா; ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 120 ரூபா; அரிசி மட்டுமே தாராளமாக உண்டு. வேறு எந்தப் பொருளும் அங்கு தாராளமாக வாங்க முடியாது.

அங்குள்ள குளங்கள் வற்றியுள்ளதால் மக்கள் தண்ணீருக்கு பெரும் அவதிப்படுகின்றனர்.

அங்கு இயங்கும் ப-நோ.கூ. சங்கங்களில் அரிசியைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் விற்பனைக்கு இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

''இந்த அவல நிலை குறித்து ஜனாதிபதியுடன் பேசி விரைவாகப் பாதை ஒன்றைத் திறக்க முயற்சிப்பேன்'' என்றும் ஆயர் கூறினார். (உ-3)

## இணுவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம்காலைஇடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பலியானதாகக் கூறப்பட்ட இளைஞன் ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலீஸாரால் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சடலம் இனம்காணும் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-139)

## தவணைப் பரீட்சை செவ்வாயன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்த யாழ். கல்விவலயப் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்து நடைபெறுமென யாழ். வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-ரி-173)

## கலை நிகழ்ச்சி

அரியாலை, ஜூலை 18

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் நடத்தும் கலை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3மணிக்கு நிலையக்கலையரங்கில் இடம்பெறும். (ஐ-17)

## போஷாக்கு கல்விக்கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 18

பளைப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் நடத்தப்படும் போஷாக்கு கல்வித் திட்டத்தின் கீழ் கிராம மக்களுக்கான போஷாக்கு கல்விக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு அரசர்கேணி ச சமூக நிலைய மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு கல்விக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் நடைபெற்றது. (ஐ-117)

## கைகலப்பில் காயம்

நெல்லியடி, ஜூலை 18

கள்ளுத் தவறணையில் இரு சாராருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தகராறு இறுதியில் கைகலப்பில் முடிந்தது. ஒருவர் தலையில் காயம் அடைந்தார்.

இச்சம்பவம்கடந்தவியாழக் கிழமைமாலை நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த சு. புலேந்திரன் (வயது 43) என்பவரே இக்கைகலப்பின் போது பேனை ஒன்றினால் தலையில் குத்தப்பட்டுக் காயமடைந்துள்ளார். இவர் தற்பொழுது மந்திகை மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-109)

## நிதி உதவி

தென்மராட்சி, ஜூலை 18

பளைப் பிரதேச சபையினால் நடத்தப்படும் மகப்பேற்று மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் அபிவிருத்திக்கென வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நிதியின் மூலம் தாய்மார், சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகள், போசாக்குமருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## வல்வைப் பகுதிக்கு 24 மணி நேர மின்சாரம்

வடமராட்சி, ஜூலை 18

வடமராட்சிப் பிரதேசத்தில் மூன்றாம் கட்டமாக வல்வெட்டித்துறைப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கும் 24 மணிநேர மின்சாரம் கிடைத்துள்ளது.

அடுத்த நான்காவது கட்டமாக வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை நகரசபைப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரவிநியோகத்தை வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே முதலாம், இரண்டாம் கட்டமாக நெல்லியடி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-173-4)

## மாவிட்டபுரம் உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூலை 18

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை மகோற்சவம் சார்பான காம்யோற்சவம் ஆரம்பமாகின்றது. இந்த உற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் 11 ஆம் திகதி ஆடி அமாவாசை நாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும்

உற்சவ நாள்களில் அபிஷேகம், விசேட ஆராதனை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

இந்த 25 நாள் உற்சவத்திலும் பக்தர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. (அ)

## பளையில் கோழிகளுக்கு நோய்

தென்மராட்சி, ஜூலை 18

பளைப் பகுதியில் நிலவும் அகோர வெப்பம் காரணமாக 'கம்போரா' என்னும் நோய் ஏற்பட்டு பெரும் எண்ணிக்கையான கோழிகள் இறந்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

நோய்த் தடுப்பு மருந்து விநியோகம் இங்கு இல்லாததால் நோயினைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கட்டட திறப்பு விழா

அரியாலை, ஜூலை 18

அரியாலை சரஸ்வதி மத்திய சனசமூக நிலையம், நூல் நிலையம் போன்றவற்றின் அமுத விழாவை முன்னிட்டு திருமதி இராசாம்பாள் சிவசுந்தரம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டடத்தின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

பிற்பகல் 3.30 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறும் (ஐ-17)

# இலங்கைக் கத்தோலிக்கர் மனதில் நிறைந்திருக்கும் சாங்கோ சுவாமிகள்

இற்றைக்கு 260 வருடங்களுக்கு முன் இலங்கைக் கத்தோலிக்கர்களுக்கு மிகவும் சங்கடமான காலமாக இருந்தது. ஏனெனில் அன்றைய ஒல்லாந்த அரசன் கத்தோலிக்க சமயத்தில் சேருபவர்களை மிக மோசமாகத் துன்புறுத்தி வந்தான். இலங்கையில் இந்தக் காலகட்டத்தில் தான் முத்திப் பேறு பெற்ற, பட்டம் பெற்ற ஆசான் யோசவ்வாஸ் முனிவரும் யாக்கோமே கொன் சால்வெஸ் எனும் சாங்கோ பாங்க சுவாமிகளும் ஒல்லாந்த அரசனின் எல்லாத் துன்புறுத்தல்களுக்கும் முகம் கொடுத்து இலங்கை முழுவதும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பி மாபெரும் வெற்றி கண்டார்கள். இவர்கள் இருவரும் புனித பிலிப் நேரியாரின் தியானப் பிரசங்கியார் சபையைச் சேர்ந்த குருமார்கள் ஆவர் சாங்கோ பாங்க சுவாமிகள் தலை சிறந்த தர்க்கப் பிரசங்கியார் ஆகவும், கத்தோலிக்கரின் வழிபாட்டு நூல்களின் தலை சிறந்த நூல் ஆசிரியராகவும் விளங்கினார். அந்தக் காலத்தில் அச்சுக்கூடங்கள் இல்லாததால் எல்லா நூல்களும் கையெழுத்துப் பிரதிகளாகவே இருந்தன இந்தப் பாரிய கருமத்தை பூர்த்தி செய்வதற்கு சுவாமிகள் பல நாள்கள் இரவு வேளைகளில் கண் விழிந்தே செயற்பட்டுப் பல கஷ்டங்களையும் அனுபவித்தார்.

இவர் எழுதிய நூல்களில் கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளைப் பற்றி எழுதிய 'வியாகுலப்பிரசங்கம்'' மிகவும் மகத்தானது. இந்தப் புத்தகத்தை எந்த மதத்தவர் வாசித்தாலும் கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளை நேரில் பார்த்தது போன்ற ஓர் அனுபவத்தை அடைவார்கள். இவரின் வசன நடையில் மெய்சிலிர்க்க வைக்கும் பக்திப் பரவசம் விரவியுள்ளதை வரிக்கு வரி வாசிக்கும் எல்லோராலும் உணரக்கூடியதாக உள்ளது.

இன்று இலங்கையில் கத்தோலிக்கரால் ஆலயங்களில் பயன்படுத்தப்படும் வழிபாட்டு நூல்கள் யாவும், சாங்கோ பாங்க சுவாமிகள் அன்று எழுதிய வழிபாட்டு நூல்களின் அடிப்படையிலேயே இருக்கின்றன. உதாரணமாக வியாகுல பிரசங்கம், சிந்துப்பிரார்த்தனை சுவிஷேச விரித்துரை என்ற வழிபாட்டு நூல்கள் எந்தவித மாற்றமும் இன்றி நடைமுறையில் இருக்கின்றன.

சாங்கோ பாங்க சுவாமிகளின் அளவு கடந்த பக்தி வைராக்கியமானது பல அற்புதங்களை நடைமுறைப் படுத்த உதவியது. இறைவன் இவருக்கு மேலான வரங்களையும் கொடுத்தார். உதாரணமாக அசுத்த ஆவியினாலும், நோய்களினாலும் பீடிக்கப்பட்டவர்களை ''ஆசி நீர்'' மூலம் ஆசீர்வதித்து செபம் செய்து குணப்படுத்தினார்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

### நாளை

ஆடி 03

திங்கட்கிழமை

திதி: ஸப்தமி

வைகறை 4.57 வரை

நட்சத்திரம்: அத்தம்

முன் இரவு 10.02 வரை

சுபநேரம்: 12.01— 1.31

ராகுகாலம்: 7 .31— 9.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதனின்மன உறுதி மலைகளையும் தகர்த்து எறியும்

— அரேபியப் பழமொழி

## சி.பி. சேனராயர்

29 வயதில் இலங்கை வந்த 37 வருடங்கள் மிகச் சிறந்து அப்போஸ்தலிக்க தொண்டு புரிந்து 66 வயதில் 17—07—1742 இல் அமரரானார் இன்றும் இவரின் கல்லறை சிலாப மறை மாவட்டத்தில் போளை ஆலயத்தில் இருக்கின்றது. இவர் இங்கு கத்தோலிக்க மதம் பரவ அருந் தொண்டு புரிந்தார்.

சாங்கோ பாங்க சுவாமிகளின் 257 ஆவது மறைவு தினத்தை ஒட்டி கத்தோலிக்க மக்கள் மிகமிக அக்கறையுடன் நினைவு கூர்ந்து அன்புருக மனம் நிறைந்த நன்றிகூறுகிறார்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 76 தமிழ்ச் சிறார்கள் சேர்ந்து லண்டனில் நடத்திய நான்கு மணிநேர நாடக விழா

லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கழகம் கலை உலகிலே தனது கலைப் பயணத்தின் இருபதாவது ஆண்டு நிகழ்ச்சித் தொடரிலே லண்டனில் சிறுவர் நாடக விழா ஒன்றை முதல்முறையாக இலவசமாக நடத்திப் பெரும் வெற்றி கண்டுள்ளது. சிறுவர் நாடக விழா மேற்கு லண்டன் மாநகரில் உள்ள கிறீன் போட் (Green Ford) என்னும் இடத்தில் அமைந்துள்ள பெரிய மண்டபத்தில் நான்கு மணி நேரம் இடம்பெற்றது மண்டபம் நிறைந்த புலம்பெயர் தமிழ் நாடக ரசிகர்களின் சிந்தனையை இந்த நாடகம் தூண்டியது என்றால் அது மிகையாகாது.

தமிழ்அவைக்காற்று கலைக் கழகம், கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை, பிரெஜன்ற் தமிழ்ப் பாடசாலை, லண்டன் தமிழ் நிலையம் என்னும் நான்கு கல்வி, கலாசார அமைப்புக்களைச் சேர்ந்த எழுபத்தாறு சிறார்கள் பங்கு கொண்ட இந்த நாடக விழாவில் 5 நாடகங்கள் 4 மணி நேரம் அரங்கத்தை அலங்கரித்தன. நடன ஆசிரியையும் சிறந்த அறிவிப்பாளரும் அவைக்காற்றுக் கழக உதவி நாடக நெறியாளருமான திருமதி ஆனந்தராணி பாலேந்திரா விழாவைநெறிப் படுத்தினார்.

முதலில் கே. பாலேந்திரா அவர்களின் நெறியாள்கையில் லண்டனில் பெரும் வரவேற்பைப் பெற்ற அவைக்காற்றுக் கழகத்தினரின் 'ஒரு பயணத்தின் கதை' என்றநாடகம் அரங்கிற்கு வந்தது. இரண்டாவது தடவை லண்டனில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் எழுபதுகளில் ''யுகதர்மம்'' என்னும் பெயரில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை கொழும்பு, பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களிலும் பல பாடசாலைகளிலும் பல தடவை இலங்கையில் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியரான உலக நாடக மேதை பேர்டோல்ற் பிறெக்ற் சிறுவர்களுக்கான கற்பித்தல் நாடகங்கள் என்று வகைப்படுத்தி எழுதிய நாடகம் இது. அவரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்த வேளை இந்த நாடகம் பல தடவை மேடையேறுவது சாலப்பொருந்தும்.

இந்த நாடகத்தில் வரும் கண்ணனின் இசையில் உருவான மறைந்த கவிஞர் ச. வாசுதேவனின் பாடல்கள் எழுபதுகளில் இருந்து இப்போதும் கலாரசிகர்களின் வாய்களில் முணுமுணுக்கப் படுவதைக் குறிப்பிட்டாக வேண்டும். சிந்திக்க வைத்த சிறந்த நாடகமாகவே இது அமைந்தது.

**லண்டனிலிருந்து**
**சுதன்**

### அங்கும் சங்கிலியன்

அடுத்து எம். ரி. செல்வராஜாவின் நெறியாள்கையில் கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை மாணவர்கள்கலந்துகொண்ட ''சங்கிலியன்'' நாடகம் அரங்கேறியது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தன்மானம் மிக்க தமிழ் மன்னன் சங்கிலியனின் வரலாறுகளைச் சிறப்பாக எடுத்தியம்பிய இந்த நாடகம் புலம்பெயர் ரசிகர்களை தாய் நாட்டை நோக்கிய சிந்தனையில் நிச்சயம் திசை திருப்பியிருக்கும். உணர்வுபூர்வமாக சிறுவர்களால் நடிக்கப்பட்டது ''சங்கிலியன்'' நாடகம்.

அதனையடுத்து அவைக்காற்றுக் கழகத்தினரின் புதிய தயாரிப்பான ''பரமார்த்த குருவும் சீடர்களும்'' என்னும் நாடகம் அரங்கேறியது. வீரமாமுனிவர்எழுதிய நகைச்சுவை ததும்பும் படிப்பினை ஊட்டும் கதைகள் சிலவற்றைத் தொகுத்து நாடகமாக்கியுள்ளார் பேராசிரியர் சி. சிவசேகரம்

கே. பாலேந்திராவின் நெறியாள்கையிலேஉருவான இந்த நாடகத்தை முப்பத்திரண்டு சிறார்கள் இணைந்து நடித்து மண்டபத்தை சிரிப்பொலியில் ஆழ்த்தினர். வெறும் ஏட்டுப் படிப்பினால் ஆவதொன்றும் இல்லை என்ற கருத்தை வலியுறுத்திக்கூறும் நாடகமாக அது அமைந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து செல்வி செல்வமணி வடிவேலுவின் நெறியாள்கையில் லண்டன் தமிழ் நிலையம் வழங்கிய ''அவள் பறந்து போனாளே' என்ற நாடகம் இடம்பெற்றது. புகலிட வாழ்வின் போலி வாழ்க்கையை ஏளனம்செய்யும் இந்த நாடகம் நகைச்சுவையாகவும் சுவாரஸ்யமாகவும் காணப்பட்டது.

வெள்ளையனின் கலாசாரத்தைத் தழுவும் நம்மவரின் சிந்தனையை இந் நாடகம் நிச்சயம் தூண்டியிருக்கும். புலம்பெயர்ந்த மண்ணில் நம்மவரின் பண்பாடு கலாசாரம் எந்தளவுக்கு மாறி வருகின்றன என்பதை வெளிப்படுத்தியது 'அவள் பறந்து போனாளே'' நாடகம்.

இதனைத் தொடர்ந்து லண்டனில் பல தடவை மேடையேற்றப்பட்ட ''அயலார் தீர்ப்பு'' என்ற நாடகம் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாகியது. நம்மவர் பிரச்சினையில் அந்நியரைத் தலையிட விடாமல் நாமே முடிவுகாண வேண்டும் என்கிறது இந்நாடகம். இது இரண்டு பூனைகளின் அப்பத்தைப் பங்கிட்ட குரங்கின் கதை மூலம் சிறப்பாக எடுத்து விளக்கப்பட்டது. முப்பத்தைந்து சிறுவர்கள் பங்கேற்ற இந்த நாடகத்தை சி. சிவசேகரம் பிரதியாக்கம் செய்ய கே. பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார்.

விழா இறுதியில் அதில்பங்கு கொண்ட சிறுவர்களை தமிழ் நாட்டின் பெண் நாடக நெறியாளர் மங்கையும் இன்னும் சிலரும் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவித்தனர்.

மொத்தமாக சொல்வதானால் இளைய தலைமுறையினரின் நடிப்புத்திறன் வளரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின்பணிமேலும் சிறப்படைந்து வளரும் என்பதை உணர்த்தியது. ★

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

**கலைச்சுடர்**

# தேவாரத் திருப்பதிகங்களை சாறாகப் பிழிந்து தேனாகத் தரும் 'மூவர் தமிழ்'

அண்மையில் வெளிவந்த அரியதொரு நூல் மூவர் தமிழ். மூவர்: அப்பர், சம்பந்தர், சுந்தரர். மூவர் தமிழ்— தேவாரம்.

சிவபெருமான் தேவார முதலிகளை அதிட்டித்து நின்று தேவாரத் திருமுறைகளைத் தோற்றுவித்தார். அதனால் தேவாரங்கள் தமிழ் மறை எனப்படுகின்றன என்பது சைவச் சான்றோர்களது கருத்து. நூலாசிரியர் இக் கருத்தை ''மறைகளாய நான்குமென மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப் பதிகம்'' எனவும் ''இருக்கு மொழிப் பிள்ளையார் எதிர் தொழுது நின்றருள'' எனவும் ''தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்'' எனவும் வரும் கூற்றுக்களை எடுத்துக்காட்டி வலியுறுத்துகிறார்.

**நூல்: மூவர் தமிழ்**
**ஆசிரியர்: மட்டுவில் ஆ. நடராசா**

தேவாரம் என்பதற்கு வேறு வேறு கருத்துக்களை முன் வைக்கும் ஆசிரியர், தேவனுக்குப் பாடுவோரிடம் வார்த்தை—அன்பை — உண்டாக்குவது என்னும் கருத்தை முன்வைத்து இறையருளைப் பெறுவதற்குத் தேவாரங்களைப் பாடுவதே சிறந்த வழி என்பதை உணரவைக்கின்றார்.

வாரம் என்பதற்கு உரிமை என்னும் பொருளும் உண்டு என்று கூறும் ஆசிரியர், தேவாரம் என்பதற்கு, தேவனுக்கே—சிவனுக்கே—உரிமையானது என்னும் பொருளுமுண்டு என்கிறார். அத் தேவர் தேவர் அவர் தேவர் என்றிங்கன் பொய்த்தேவு பேசித் திரிகின்ற பூதலத்தே மெய்த்தேவன் செம்மேனி எம்மான் சிவனென்று கூற வேண்டிய தேவை இன்று இருக்கிறது- அதனாற் போலும் தேவாரம் சிவனுக்கு முதன்மை தருவதுடன் சிறு

**நூல் வரிசை**

தெய்வ வழிபாட்டை மறுக்கிறதென்பதை நூலாசிரியர் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

தேவாரத் திருமுறைகளில் எங்கெங்கு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அரும்பாகிப் போதாகிப் பூவாகி வாசனை வீசுகின்றனவோ அவற்றையெல்லாம் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

இறைவனின் தடத்த சொரூப இலக்கணங்கள், இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உயிர்களுக்கு உபகரிக்கும் அத்துவித நிலை என்பன பற்றித் தேவாரங்கள் கூறுவதை ஆசிரியர் சைவ சித்தாந்தத்துக்கு மாறுபடாத வகையில் தெளிவாக விளக்குகிறார்.

'மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில் கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும்' என்பதையும் இறைவன் தன் அடியார் செய்யும் அநாசாரங்களையும் பொறுப்பான் என்பதையும் எடுத்துக்காட்டி, குற்றஞ்செய்தவர்களும் தாம் செய்தது குற்றம் என்பதை உணர்ந்து இறைவனை அடைந்து வழிபட்டால் அவனது அருளைப் பெறலாம் என்கிறார் ஆசிரியர். இதை நோக்கும் போது மண்ணிற் பாவஞ்செய்யாமல் வாழ்தல் அரிதென்றும் பாவம் செய்தவரை இறைவன் மாறா நரகில் இட்டால் அவனைக் கருணை வள்ளல் என மொழிவது நன்றல்லவே எனவும் உமர்கயாம் ஒரு பாடலிற் கூறுவது நினைவுக்கு வருகிறது.

**புலவர்மணி பண்டிதர்**
**க. மயில்வாகனனார்**

இறைவனைப் பூவும் நீரும் கொண்டு பணிய வேண்டுமென்பதை வேண்டும் இடமெங்குங் குறிப்பிடும் ஆசிரியர் அட்ட புஷ்பங்கள் பற்றித் தெளிவான விளக்கந் தருகிறார். புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பன அட்ட புஷ்பங்கள் என்று கூறும் ஆசிரியர் இம் மலர்களை மாத்திரமன்றி, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எட்டு ஒழுக்கங்களையும் எட்டு மலர்களைக் கொண்டு வழிபட வேண்டும் என்கிறார்.

விபூதி உருத்திராக்கப் பெருமைகளைத் திருப்பதிகங்கள் மூலம் விளக்கும் ஆசிரியர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் பெரிது என்கிறார். அகச் சமயங்கள் எவை, அந்நாளிற் சிவாலயங்களில் நிகழ்ந்த விழாக்கள்

(11 ஆம் பக்கம் பார்க்க)

**எதிரொலி...**
**இடியன்**

- உடைகளைச் சலவை செய்வதைப்போல், மனிதர்களைச் சலவை செய்வதற்கும் புதிய இயந்திரமொன்று ஜப்பானிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.!

★ **மனிதர்களிடையேயுள்ள சாதிப் பாகுபாட்டை ஒழிக்கக்கூடிய இத்தகைய புதிய 'சாதி' இயந்திரங்கள் சில சமயம் மனித சாதியைக்கூட ஒழித்துவிடும்!**

- பாரதிய ஜனதாவை ஆட்சி பீடத்தில் ஏற்றியது தவறு என்பதைத் தான் உணர்ந்தபடியாலேதான் அதைப் பதவி இழக்கச் செய்வதில் தான் முன்னின்றுழைத்ததாக அ. இ. அ. தி. மு. க. தலைவி கூறுகின்றார்.

★ **தேர்தல் நெருங்க நெருங்க இத்தகைய பொ(ய்)ன் மொழிகள் பல உதிர்க்கப்படலாம்!**

- மன்னாரிலே தான் நடத்திய கண் சிகிச்சை முகாமிற்கு 1500 ற்கு மேற்பட்டோர் வந்து பயனடைந்தார்கள் என ஜெயலத் ஜெயவர்த்தனா கூறுகிறார்; இரண்டு பேர் மட்டுமே அங்கே சென்றதாக அமைச்சர் பெர்னாண்டோப்பிள்ளை சொல்கிறார்!

★ **யாருடைய 'பார்வை' யிலே கோளாறு என்பது சரியாகத் 'தெரிய' வில்லை!**

- அடுத்து வரும் பொதுத்தேர்தலிலே தாம் தனித்துப் போட்டியிடப் போவதாக பொ. ஐ. முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பல கூறியுள்ளன.

★ **இது அறிவித்தலா? அச்சுறுத்தலா? எச்சரிக்கையா? என்பது போகப் போகத்தான் தெரியும்!**

- தமிழ் மக்கள் கண்டபடி கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

★ **'கண்டபடி' கைது செய்யப்படுவது மட்டுமல்ல, 'காணாதபடி' செய்யப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும்!**

- எந்த எந்தத் தொகுதிகளில் யார் யாரை நிறுத்துவது என்பதைப் பற்றி அரசியற் கட்சிகள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன!

★ **அதாவது பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ''யாராளு'' மன்றத் தேர்தல் நடக்கிறது?**

- போதைப் பொருள் வியாபாரத்திற் குரங்குகள் பயன்படுத்தப்படுகின்றன!

★ **வியாபாரத்துக்கு மட்டுமல்ல, விளம்பரத்துக்கும் குரங்குகளைப் பயன்படுத்தலாமே! போதைப் பொருளை உட்கொண்டால் எவ்வளவு தூரம் 'சுதந்திரமாக' நடக்கலாம் என்பதை விளக்க குரங்குகளைவிட வேறு சிறந்த சாதனம் இல்லை!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பாதை திறப்பு விவகாரம்:

# முடிவுகாணப்படாத பாதையில்...

வன்னிக்கான போக்குவரத்துப் பாதையைத் திறக்கும் விடயம் முடிவு காணாத பாதையில் போய்க்கொண்டிருக்கிறது. 'ரணகோஷங்கள்' ஆரம்பித்தபின்னர் அப்படி இப்படி என்று இருந்த எல்லா பாதைகளும் மூடப்பட்டுவிட்டன. கடந்த ஜூலை 26 ஆம் திகதியின் பின் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கும் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள தென் பகுதிக்குமிடையில் தொடர்புகள் எதுவும் இல்லை. வன்னிக்கு கடந்த 20 நாள்களுக்கு மேல் உணவு விநியோகம் நடைபெறவில்லை; தபால் போக்குவரத்து இல்லை: மருந்து விநியோகம் இல்லை என்பதை விட வன்னிப் பகுதியில் உள்ள பெருமளவு மக்களின் சம்பளம் முதல் ஓய்வூதியம் ஈறாக, பணப்பரிமாற்றம் கூட ஸ்தம்பித்துப்போயிருக்கிறது. குறிப்பாக வன்னிப் பகுதியிலுள்ள பெரும் எண்ணிக்கையான குடும்பங்களில் பிள்ளைகளோ, பெற்றோரோ, சகோதரரோ வெளிநாட்டிலே இருக்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும்பணத்தை எடுத்துச் சென்றுதான் பலரின் அன்றாட வாழ்க்கையே நடக்கிறது. அவ்வாறு வரும் பணத்தை எடுத்துச் செல்ல தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வவுனியா— மன்னார் போன்ற பகுதிகளுக்கு வந்து செல்வது வழக்கம். ஆனால் இப்போது அதுவும் ஸ்தம்பித்துப் போய் விட்டது.

மொத்தத்தில் உணவில்லை; மருந்தில்லை; தபால் வசதியில்லை என்பவற்றுடன் தட்டுப்பாடாக உள்ள அதிக விலையில் விற்கும் பொருள்களை வாங்க பணவசதியும் இல்லாத நிலை. இந்த நிலை அங்கே உள்ள மக்களைப் பெரும் மனப் பாதிப்புக்கும் உடற் பாதிப்புக்கும் ஏற்படுத்தி விடுவது மட்டுமல்லாமல் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையை முன்கூட்டியே உத்தேசித்து வவுனியா அரச அதிபரும் ஏனைய அரச சார்பற்ற பிரதிநிதிகளும் வன்னிக்கு புதிய பாதை ஒன்று திறக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி கடந்த மாதக் கடைசியிலேயே இது தொடர்பாக இராணுவத்துடன் தொடர்பு கொண்டனர். இராணுவத்தினரும் மிகப் பெரிய உபகாரமாக மூன்று பாதைகளைக் கூறி அதில் ஏதாவது ஒன்றை திறக்கச் சம்மதம் தெரிவித்தனர். அந்தச் சம்மதம் சமாத்தாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களும் கண்டி வீதி ஊடாக மாங்குளத்தின் பாதையைத் திறக்கச்சம்மதித்தனர். இவையெல்லாம் கடந்த வாரத்திற்கு முதல் நடந்த சம்பவங்கள். இந்தச் சம்பவங்களால் விரைவிலே பாதையொன்று திறக்கப்படலாம் என்று பலரும் நம்பினர். ஆனால் கடந்த வாரச் சம்பவங்களெல்லாம் தலைகீழாக மாறிவிட்டன.

பாதையைத் திறக்கச் சம்மதித்த இராணுவம் சில நிபந்தனைகளை விதித்தது. அதன்படி கண்டிவீதியில் 140 ஆம் கட்டையடி என்ற மாங்குளம் சந்திக்கு வடக்காக உள்ள இடத்தில் இராணுவத்தினரின் இறுதிச் சோதனைச் சாவடியை அமைப்பதென்றும்—

அதற்கு 5 மைல் தொலைவிலுள்ள 145 ஆம் கட்டையடியில் புலிகளின சோதனைச் சாவடி இருக்கலாம் என்றும்-

இடைப்பட்ட 5 மைல் பகுதியும் யுத்தசூனியப் பிரதேசமாகப் பேணப்படவேண்டும் என்றும்—

## வவுனியா வலம்

-ரா.இளவரசன்-

' நிபந்தனைகளுடன் கண்டி வீதியில் இந்தப் பக்கம் அரை கிலோமீற்றரும், அந்தப் பக்கம்அரைகிலோமீற்றரும் இந்த யுத்தசூனியப் பிரதேசத்திற்கு எல்லையாக அமைய வேண்டுமென இராணுவத்தினர் குறிப்பிட்டனர். அந்தச் செய்தியை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் எடுத்துச்சென்று புலிகளிடம் கொடுத்தபோது அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாத நிலை ஏற்பட்டுள்ளது.

புலிகள் ஏன் ஏற்கவில்லை என்பது பற்றி விவரமாக ஓர் அறிக்கை மூலம் புலிகள் தெரிவித்துள்ளனர். அதிலிருந்து படையினரின் இந்தப்பாதை திறப்பு முயற்சியில் புலிகள் சந்தேகம் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது.

புலிகள் பாதையைத்திறக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வன்னிக்கான பாதை திறப்பில் அவர்பெரும் ஈடுபாடு கொண்டவராக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. புலிகள் வன்னிக்கான பாதையைத்திறக்க ராணுவத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் அந்த நிபந்தனைகளை விட்டுக்கொடுக்க அவர் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்காக அடுத்த கடிதம் விரைவிலேயே புலிகளுக்கு அனுப்பப்படஉள்ளதாகத் தெரிய வருகிறனர்.

இதேவேளை — வன்னியில் நிலைமை மோசமாக இருப்பதாக முல்லைத்தீவு அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் நிவாரணம் கொடுக்கமுடியவில்லை. உணவுக் கையிருப்பு முடிந்து விட்டது. எரிபொருள் கையிருப்பில் இல்லை. தீவிர நோயாளர்களை வவுனியாவிற்கோ தென்பகுதிக்கோ அனுப்ப முடியவில்லை. நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. எனவே உடனடியாக பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை—

மன்னார் ஆயர் இராயப்பு யோசப் மன்னாரிலிருந்து-விடத்தல் தீவுக்குபடகு மூலம் சென்று வன்னி நிலைமைகளை அறிந்துவந்திருக்கிறார்.

இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில்வசிக்கும்மக்கள் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்க இந்த போக்குவரத்துச் கஷ்டத்தால் வவுனியாவிலும், மன்னாரிலும் உள்ள சிலரும் உணவின்றி — இருக்கஇடமின்றி— கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வன்னியிலிருந்து தமது சொந்தத் தேவைகளுக்காக வந்து திரும்பச் செல்லமுடியாதிருப்பவர்களே இவர்கள். வன்னியிலிருந்து வந்து வெளிநாட்டிலிருக்கும் தமது உறவினரிடம் பணம் பெற்றுச் செல்ல வந்தவர்கள் உறவினரிடமிருந்து வந்த பணம் முழுவதையும் தங்கியிருந்த லொட்ஜ்ஜுகளுக்கும் சாப்பாட்டுச் செலவுக்கும் கொடுத்துவிட்டு அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்க, வியாபார நோக்கமாக வந்தவர்கள் அன்றாடச் செலவுகளினால் தமது மூலதனத்தையே இழந்து விட்டு நிர்க்கதியாகியுள்ளனர்.

இவ்வாறான 60 பேர் மன்னாரில் உள்ள வை.எம்.சீ.ஏ. கட்டடத்தில் வைத்து மன்னார் செயலகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். வவுனியாவில் சுமார் 2 ஆயிரம் பேர் வரையானோர் கையிலிருந்த பணத்தை எல்லாம் முடித்துவிட்டு அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையில் வவுனியா செயலகத்திற்கு அடிக்கடி சென்று ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

ஆனால் பாதைத் திறப்பு இப்போது சாதகமாகும் சூழ்நிலை இல்லாத நிலையில் தற்போது அவர்களின் பெயர்கள் வவுனியா செயலகத்தில் பதியப்பட்டு வருகின்றன. இவர்களை வவுனியாவில் உள்ள சனசமூக முகாமில் (கோழிக்கூட்டு முகாம்) வைத்து உணவு வழங்கிப் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வன்னிக்கான பாதைத் திறப்பில் ஏற்படும் தாமதம் வன்னியிலே உள்ள மக்களைத் தவிர இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களையும் திண்டாட வைத்திருக்கிறது. ★

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி

# யாழ்ப்பாணத்தை சேர்ந்த சதாசிவமே!

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் மே மாத இறுதியில் நடைபெற்ற ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் குறித்து எழுத்தாளர் செங்கை ஆழியான் கருத்துரை வழங்கினார். அந்தக் கருத்துரையின் தொகுப்பு இது.

தொகுப்பு:

நெடுந்தீவு லக்ஷ்மன்

ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு குறித்து ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. தமிழ்ச் சிறுகதையின் பிதாமகர்களாக வா.வே.சு. ஐயர், சுப்பிரமணியபாரதியார், மாதவையா ஆகிய மூவரும் கொள்ளப்படுகின்றனர்.

இந்த மூவரும் 1915 க்குப் பிற்பட்ட காலத்தவர்கள். இவர்களுக்கு முன்பே 1875 இல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்னல்ட் சதாசிவம் என்பவர் பல சிறுகதைகளை எழுதியுள்ளார் என அறிய முடிகிறது. இது பற்றி பேராசிரியர் கைலாசபதி ஒரு கட்டுரையில் தொட்டுக்காட்டியுள்ளார்.

தமிழில் சிறுகதை வரிசை என்ற நூலை எழுதிய ஈழத்து எழுத்தாளர் கோ. சிவபாத சுந்தரமும் தமிழக எழுத்தாளர் சிட்டி என்பவரும் தமது நூலில் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையையே ஆரம்ப முதல் தமிழ் சிறுகதையாளராகக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த ''அலயன்ஸ்'' புத்தக வெளியீட்டு நிறுவன உரிமையாளர் குப்புசாமிஐயர் நாற்பது பேரின் சிறுகதைகளைத் தொகுத்து கதைக்கோவை என்ற தொகுதியை வெளியிட்டார். 1941–1942க்குஇடைப்பட்ட காலத்தில் வெளியான இந்தக் கோவையில் ஈழத்து எழுத்தாளர்களான சம்பந்தன், வைத்திலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோரின் சிறுகதைகள் இடம்பெற்றன. இந்த மூவரும் கலைமகள் பத்திரிகையில் எழுதியமையால் குப்புசாமிஐயரின் தொகுப்பில் இடம்பிடிக்க நேர்ந்தது. இவர்கள் மூவரையுமே கணிக்கப்பட்ட எழுத்தாளர்களாக விமர்சகர்கள் எடுத்துக் கொண்டனர்.

அதனால் புனைகதை வரலாற்றில் ஈழத்தில் இம்மூவருமே சிறுகதையின் திரிமூலர் எனக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இவர்களுக்கு முதலே ஈழத்தில் குறிப்பாக ''ஈழகேசரி'' பத்திரிகையில் ஆனந்தன், பாணன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க நல்ல கதைகளை எழுதியுள்ளனர்.

ஈழத்துச் சிறுகதை வரலாறு சம்பந்தன், இலங்கையர்கோன், வைத்திலிங்கம் ஆகியோருடன் தொடராது சற்று முன்னோக்கியதாக அமைய வேண்டும். ஈழத்து முன்னோடிஎனும்போது ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையிலிருந்து 1948 — 1949 களில் எழுதிய கு. பெரியதம்பி வரை கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது இருப்பை வருங்காலத்துக்குக் காட்ட வேண்டும். தமிழ்ச் சிறுகதைகள் குறித்து இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் மாற்றப்படவேண்டும். மாலன், கந்தசாமி என்பவர்களின் கருத்தைப் பார்க்கும் போது தமிழுக்கு சிறுகதை புதியதல்ல என்றே சொல்கிறார்கள். சிறுகதை முன்னோடிகள் பற்றி [illegible] ஆய்வுகளை [illegible] ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா வின் புதிய உறுப்பு நாடுகள்

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 184 வது உறுப்பு நாடாக அன்டோறா (Andorra) 28-7-93 இல் அனுமதி பெற்றது. இதற்குப் பின்னர் 23-6-94 இல் தென்னாபிரிக்கக் குடியரசு மீள் அனுமதி பெற்று 185 ஆவது உறுப்பு நாடாகியது.

சுமார் ஐந்து ஆண்டுகள் கழிந்த பின் கடந்த 30-6-99 இல் 186 ஆவது உறுப்புநாடாக நாரு (Nauru) 187 ஆவது உறுப்பு நாடாககிரிபாற்றி (Kiribati) ஆகிய பசுபிக் சமுத்திரத்திலுள்ள இரு சிறிய தீவுகள் சேர்க்கப்பட வேண்டும் என ஐ. நா. பாதுகாப்புச் சபை சிபார்சு செய்துள்ளது. இதற்குரிய வாக்களிப்பில் நிரந்தர உறுப்பு நாடுகளுள் ஒன்றாகவும் வல்லரசுகளுள் ஒன்றாகவும் உள்ள சீனா கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்துள்ளது.

## தகவல் மேடை

### நாரு

ஆஸ்திரேலியாவுக்கு வடகிழக்கே சுமார் 2,500 கிலோ மீற்றர் [1,500 மைல்] தூரத்தில் அமைந்துள்ள இத்தீவின் பரப்பளவு 8 சதுரமைல்கள் மட்டுமே. சனத்தொகை சுமார் 10,000. இத்தீவு 1888 இல் ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டு 22-10-1947 இல் ஐ. நாவின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு பிரித்தானியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சுமார் 20 ஆண்டுகள் சென்றதும் 31-1-1968 இல் சுதந்திரம் பெற்றது. பெறுமதி மிக்க பொஸ்பேற் [ Phosphate ] கனியம் இத்தீவில் காணப்படுகிறது.

### கிரிபாற்றி

கிரிபாற்றி தீவுத் தொகுதிக்குப் பழைய பெயர் கில்பேட், எலிஸ் தீவுகள் [Gilbert and Ellice Islands] பசுபிக் சமுத்திரத்தில் 2 மில்லியன் [ 20 லட்சம் ] சதுரமைல் பரப்பளவைக் கொண்ட கடற்பகுதியில் 42 தீவுகளாக அமைந்துள்ளன. நிலப்பரப்பு 324 சதுரமைல். சனத்தொகை ஏறத்தாழ 80,000 [சரியான தரவு கிடைக்கவில்லை ] தலைநகர் தராவா [Tarawa] பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதும் கிரிபாற்றி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பிரதான விளைபொருள்கள் தென்னையும், பழ வகைகளும். ஏற்றுமதிப் பொருள்கள் பொஸ்பேற் கனியமும் கொப்பராவும்.

தொகுப்பு: வை. மகாதேவன்

# ஏழைகளுக்குச் சேவை செய்யும் சமூக தளத்தில் நின்று உழைத்த டாக்டர்

டாக்டர் சொர்ணலிங்கத்தின் பெயரை உச்சரிக்காத ஒரு குடும்பம் தானும் எமது வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் இல்லை. அவர் எங்கள் வீட்டுப்பிள்ளை. அவர் எமது மத்தியில் வைத்திய சேவையால் மட்டும் செல்வாக்குப் பெறவில்லை. எமது மத்தியில் வாழ்ந்த காலத்திலும் சரி பின்னர் தனது கிராமத்திலும்வாழ்ந்த காலத்திலும் சரி எமது மக்களின் அபிமானத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார்.

## நீத்தார் நயப்புரை

அவரின் மலர்ந்த முகம், இனிமையான சுபாவம், பண்பான பேச்சு அவரை எமது மக்களின் அபிமானத்திற்குப் பாத்திரமானவராக ஆக்கின

அவரின் சமூகப் பார்வை அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்த்திக்காட்டுகின்றது. பல்கலைக் கழகப் படிப்பு பகட்டான வாழ்வுக்கு அல்ல என்பதை அவர் நடைமுறைச் சாத்தியமாக்கினார்.

அவரின் துறைசார்ந்த பலர் தங்கள் நிலையை மேம்படுத்ததெற்கு நோக்கியும் பிறநாடுகள் நோக்கியும் சென்றுள்ளார்கள். அங்கு அவர்கள் மிகவும் சௌகரியமாகவும் வாழ்கின்றார்கள்.

ஆனால் டாக்டர் சொர்ணலிங்கம் மக்களோடு மக்களாக மக்கள் அனுபவித்த சுகதுக்கங்களைத் தாமும் தன் குடும்பமும் அனுபவித்துக் கொண்டு மக்களுடன் இருந்து கொண்டே சேவைசெய்தார். ஆபத்து நிறைந்த வேளையில் அவர் மக்களின் உண்மையான நண்பன் என நிரூபித்தார்.

வலிகாமம் மக்கள் இடம் பெயர்ந்த வேளையில் அவர் மக்களுடன் சென்று அவர்களுக்குச் சேவை செய்தார். மனம் பதகளித்திருந்த மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார்.

ஏழைகளுக்கும் வயோதிபர்களுக்கும் அவர் வைத்தியர் மட்டுமல்லர்; உதவியாளனும் கூட. அவரிடமிருந்து இலவசமாக மருந்தும், பணமும் பெற்ற நோயாளர்கள் பலர் எமது பிரதேசத்தில் உளர். அவர் சாதி, சமய வேறுபாடுகளுக்கப்பால்நின்று சமூகத்தைப்பார்க்கும் மனப்பான்மையைப் பெற்றிருந்தார்.

சமூக மேப்பாட்டிற்கு சமூ



கக் கல்வியே அடித்தளம் என அவர் நம்பினார். அவர் ஆலயங்களின் செயற்பாட்டிற்கு அளித்த அதே அளவு முக்கியத்துவத்தை பாடசாலை வளர்ச்சிக்கும் கொடுந்தார். அவர் செய்த சமூகத் தொண்டுகள் அவரின் சமூகப் பார்வையைப் பிரதிபலிக்கின்றன. பாடசாலை அபிவிருத்திக்கு உதவியதோடு, கல்விகற்கும் மாணவர்களுக்கு திறமையையும் சுயமுயற்சியையும் ஊக்குவிக்கும் வகையில் தங்கப்பதக்கம் வழங்கி முழுமாணவ சமூகத்திற்கும் உற்சாகமூட்டினார். அவரின் சேவை செறிந்த சமூகத்தளம் ஏழைகளுக்குள் ஏழைகளுக்கு வாழ்வளிப்பதாக இருந்தது. அவரின் சமூகப் பார்வையும் செயற்பாடும் கூட்டுறவாளர்களாகிய எம்மை மிகவும் கவர்ந்தது.


அவரின் அகால மரணத்தால் எமது பிரதேச கூட்டுறவுச் சமூகம் ஒரு சிறந்த வைத்தியனை மட்டுமல்ல ஒரு நல்ல கூட்டுறவு நண்பனையும் இழந்துள்ளது.

வலிகாமம் மேற்கு சிக்கன கடன்வழங்கும் சங்கங்களின் பிராந்திய சபைச் சங்கங்களின்உறுப்பினர்களும், குறிப்பாக வட்டு-மூளாய் வீதி ஐக்கியநாணய சங்க உறுப்பினர்களும் டாக்டரின் அகால மரணத்தை ஈடுசெய்ய முடியாத இழப்பாகக் கருதுகின்றனர்.

டாக்டரின் ஆன்மா சாந்தியடைய நாம் செய்யக்கூடிய பணியுண்டு. அவரின் பணியைப் போற்றும் ஸ்தாபனங்களும் மக்களும் அவர் வெளிப்படுத்திய சமூகப் பார்வையை உள்வாங்கிச் செயற்படுத்திப் பிரபல்யப்படுத்த வேண்டும்.

**சி. இராமச்சந்திரன்**
(வட்டு-மூளாய் வீதி ஐக்கியநாணய சங்கம்)

# மக்கள் முகம்



தெல்லிப்பழைக் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கீதபூஷணம் வ. செல்லத்துரை அவர்களின் குடும்பம் பண்டுதொட்டு இசையிலும் நாடகத்திலும் ஈடுபாடு கொண்டு விளங்கிவருகின்றது. இவரது பேரனார் இராம நாடகத்தில் இலக்குவனாக நடித்துப் புகழ்பெற்றதனால் ஊரார் அவரை இலக்குமணர் என்றே அழைத்து வந்தார்கள். இவர் சொந்தக் குரலில் பாடியும் நடித்தும் வந்துள்ளார்.

கலாபூஷணம் வ. செல்லத்துரையின் குடும்பம் ஒரு கலைக் குடும்பமாக விளங்குகிறது. அவர் 1951 ஆம் ஆண்டு மகாஜனாக் கல்லூரியிற் கல்வி கற்றபொழுது மாவிட்டபுரம் நாதஸ்வர மேதை திரு. சோ. உருத்திராபதி அவர்களிடம் இசையை ஆரம்பத்திலிருந்து கற்றார். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் ஆசிரியர் தரம் வரை கற்றுத்தேறி, பின்பு இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ''இசை மாணி'' பட்டப்படிப்பை மேற்கொண்டு இறுதித் தேர்வில் பல்கலைக்கழகத்திலே எவரும் அவ்வருடம் பெறாத நற்பெறுபேற்றைப் பெற்றார். அப்பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்து ஈழத்துக்குப் பெருமை சேர்த்தார். 1962 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வாய்ப்பாட்டுக் கலைஞராக 'A' கிரேட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1984 வரை வானொலி நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். அவரோடு இந்தியாவின் சிறந்த வித்துவான்கள் ரி. கே. ரங்காச்சாரி, M. M. தண்டபாணிதேசிகர், திருப்பாம்பரம்பிள்ளை, M. A. கல்யாணகிருஷ்ணபாகவதர் ஆகியோரிடம் பலவகை இசைஉருப்படிகளைகற்றுத்தேறியுள்ளார். அத்துடன்ஈழத்தின் பல்வேறுபகுதிகளிலும்சங்கீதக் கச்சேரிகளை நிறையவே செய்துள்ளார். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன 10 ஆவது பீடாரோஹண விழாவில் 'கானாம்ருத பூஷணம்' என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இடை நிலை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். நாடறிந்த சங்கீத வித்துவான் திரு. வ. செல்லத்துரை அவர்களை அதியுயர் விருதான கலாபூஷணம் தேடிவந்து தனக்குப் பெருமை சேர்த்துக்கொண்டது.

– செம்பியன்

★ ★ ★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 18

தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி ஆலய நாதஸ்வர வித்துவான் இ. சிவகுமாருக்கு ஆலய பரிபாலன சபையினரும் தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தினரும் இணைந்து 'நாதவிநோதன்' 'நாதகானமணி' எனப்பட்டம் சூட்டிப் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவித்தனர்.

கௌரவிப்பு விழா ஆலயபரிபாலன சபைத் தலைவர் மு. கிருஷ்ணபிள்ளை தலைமையில் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (க – 30)


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



**அமரர் செல்லப்பா கனகசபை**

மண்ணுலகில் மாந்தருடன் 08 – 10 – 1925

விண்ணுலகில் மாதேவனுடன் 19 – 01 – 1999

பெறலரிய தந்தை உன்னை வாய்க்கப்
பெற்றவராய்ப் பீடுநடை போட்டு வந்தோம்
திறலரிய உன்பேச்சும் செய்கை கண்டும்
திக்கெல்லாம் உன் புகழைச் செவிமடுத்தும்
அறமனைத்தெம் குடும்பத்தி லொன்றி நீயே
அவதரித்தீர்கள் என்று இறுமாந் திருந்தோம்
திறமனைத்தும் செயலாற்றும் தெய்வமே! எம்மைத்
திகைக்க விட்டுச் சென்றதும் செயலே தானோ?

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கணேசன் ஸ்ரோர்ஸ்,
201, K. K. S றோட்,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(67530)



## யாழ். நகரின் மையத்தில்

ஆண், பெண் இருபாலாருக்கும்
சகல உதிரிப்பாகங்களுடன்

**Lumala Cycles**

அத்துடன் ◆ சைக்கிளுக்கான சகல உதிரிப்பாகங்களும்
குழந்தைகளுக்கான ◆ பேபி வோக்கர்
சிறுவர் சிறுமிகளுக்கான ◆ ஆடம்பர சைக்கிள்கள்
அத்துடன்
◆ காட்போட் சீற் ◆ புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
[ Hero Honda 4S, Champion ]

என்பவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள:

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

இல. 162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: ★ சகல சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கும் மொத்த சில்லறை வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

★ Lumala Cycle ஆகக்கூடிய சில்லறை விலை 5,900/- மட்டும்.

T. P. No. 021 – 2660 021 – 2813

(சி/8224)



## கண்ணீர் அஞ்சலி

எம் எல்லோரது அன்பையும் பெற்ற
பொது நல சேவையாளர்

**அமரர் தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ்**

(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்)

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

திரு. கா. திருநீலகண்டன்
குடும்பத்தினர்.

உதயன் விற்பனையாளர்
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(67542)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயணத்துக்குப் பாதுகாப்பு

# அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்

வி. யசோதரன் (102261 பி), ஜே. ராயப்பு (102265 ஏ). எல். எச். ஏ, முத்து (102266ஏ), எஸ். பி. சுகமலர் (102267ஏ). எம். சிறீதரன் (102269ஏ), பி. பெனிராஜா (102270ஏ), ஜே. இ. மனுவெல் (102271ஏ), என். ஜெசிந்தா (102272ஏ), ஆர். கந்தையா (102273ஏ), ஆர். சுருபராணி (102273பி).

ரி. கமலாம்பிகை (102273 சி), எம். எமிலியானுஸ் (102274ஏ), எம். மங்கையரசி (102275ஏ)., எஸ். ரஞ்சன் (102277ஏ), பி. சிவகாமி (102277பி), பி. சிவகாமி (102277சி), எஸ். வள்ளிலிங்கம்(102278ஏ), வி. மேரி விக்ரோறியா (102278பி), வி. ஜென்சன் (102278 சி).

ஜே. பஸ்ரியான்பிள்ளை (102279 ஏ), ஆர், சிறில் (102283 ஏ), ஆர். ஜெயரூபி (102286ஏ). எஸ். சிறியமா (102289ஏ), என்- தனேந்திரன்(102290ஏ), எஸ். உதயராணி (102290பி), எஸ். பத்மாநந்தன் (102291ஏ), எஸ். றனுஷன் (102294ஏ), ஆர். தனேஸ்தனி(102294பி), ஆர். லக்ஷ்மன் (102294 சி).

எஸ். சிவானந்தன்(102295 ஏ), எஸ். சிவராஜா 102295பி), ரி. பங்காரை (102297ஏ), வி. ஜெகதீஸ்வரன் (102298ஏ), ஜே. ஜெகளெளரி (102298பி), ஜே. எஸ். சிவசக்தி (102298 சி), ஜே எஸ். ஞானானந்தன் [102298 இ], ஜே. ஜானகி [102298 எவ்], என். கந்தசாமி [102301ஏ] ரி. தேவராசன் [102302ஏ]

பி. அருப்பலம்[102303ஏ], என். சிவகுமார் [102304ஏ], பி. ஜெயக்குமார்[102305ஏ]. எஸ். ஜெயக்குமார் [102305பி], எஸ். ஜெபக்குமார் [102305 சி], எஸ். ஜெயக்குமார் [102305இ], எஸ். ஜெயக்குமார் [102305 எவ்] ரி. குலேந்திரன்[102306 ஏ], எம். ஜெகதீஸ்வரி [102307ஏ[,

எம். சச்சிதானந்தன் [102315 ஏ], எஸ். ரூபவதி [102316ஏ], ஆர். லீலாவதி ]102316பி] ஜே. கணபதி [102323ஏ], பி. நடராஜா [102325ஏ[, ஜே. பஸ்ரியாம்பிள்ளை [102279பி[, என். சுபாசினி (102325 பி), என். கிருத்தியா (102325 சி), கே. நவசிவாயம்(102327ஏ), என். நவசிவாயம்(102328ஏ), எஸ். கணேசமூர்த்தி (102334 ஏ).

ஜே. வரதரூபன்(102334பி) ரி. கெ. பூபாலசிங்கம் (102335 ஏ), பி. குணசீலி (102335 பி), எஸ். கெ. அமலேஸ்வரி (102336 ஏ), ரி. பத்மாவதி (102337 ஏ), ரி. அரியராஜா (102337பி), ரி. அயன்ராஜா (102337சி), ரி. அகல்யா (102337 டி), பி. துரைராசசிங்கம் (102341 ஏ), எ. ராசரட்ணம் (102342 எ).

ஏ. விங்கராஜா (102342பி), இ. சி. வேதநாயகம் (102349 ஏ), இ. சி. வேதநாயகம் (102349 பி). என். கண்ணம்மா (102351 ஏ), பி. செல்லையா (102351பி), ரி. கே. தயாநிதி (102352ஏ), எஸ். துரைஐயா (102352பி), ரி. பாலரமேஷ் (102359ஏ), ரி சிவதாசன் (102360ஏ), ஜே. ஐசிபா (102361 ஏ), எஸ். ரவீந்திரன்(102362ஏ) கே. சாமி (102362 பி). ரீ. ஜே. பெல்க்மன் (102371 ஏ), ஏ. சிவலிங்கம் (102372 ஏ), எஸ். பிதிஸ்வரன் (102372 பி), ஏ. ஏ. லீலாவதி (102375 ஏ), ஜே. ரமேஸ் (102377 ஏ). ஜே விஜபகுமார் (102381 ஏ), ஆர். அன்ரனி (102382 ஏ), சே. தேவநாயகம் (102383 ஏ).

ஜெ. ரெறன்சியா (102384 ஏ), ஜே. நிஷாந்தினி (102384 ஏ), ஜே. சிலோசமன் (102384 சி), ஜே. திரேசம்மா(102385 ஏ), ஆர். சற்குணராஜா (102386 ஏ), எஸ். புவனேஸ்வரன் (102386 பி), எஸ். யசோதரன் (102386 சி), எஸ். பிரியந்தனி (102386 டீ), ஏ. ஜே வி. ஜெயராஜா (102390 ஏ), ஜே. வீ. ஜெயராஜா (102390),

எஸ் சிறீகந்தராஜா(102393 ஏ), கே. பரனண் (102394ஏ), எம் செல்வராஜ் (102397ஏ), வை. செல்வராஜ்(102397பி), வி. செல்வராஜ் (10237சி) டி. ஜெ. புஸ்பராணி (102399 ஏ), கே. ராசையா (102401 ஏ), கே. புவனேஸ்வரி (102401பி), கே. காயத்ரி (102401சி), கே. குமரன் (102401டி),

என். நகுலேஸ்வரி (102402 ஏ), வி. எவ். சேவியர் (102404ஏ), எஸ். மதிஸ்வரன் (102404பி), கே- மாணிக்கவாசகர் (102405ஏ), பி. ஜெபக்குமார் (102408ஏ), கே. ராஜேந்திரன் (102410 ஏ), ஆர். அனுஷ் 102410 பி), என். மாணிக்கராணி 102411ஏ), ரி. நல்லையா (102411பி), எம். ஜே. றனிஸ்வரன் (102412ஏ),

கே. கார்த்திகா (102412 பி), எஸ். வரதராஜா(102414 ஏ), எஸ். வரதராஜா (102414பி), வி பார்த்தீபன் (102414சி), எஸ். பேரின்பநாயகம் (102305டி), எவ் இ. ஆர். ஏ போல் (102415ஏ), எவ். இ. ஆர். என். போல் (102415பி), எவ் இ. ஆர். ரட்ணராஜ் (102415சி), எஸ். ரவீந்திரன் (102418ஏ), ரி நரேஸ்வரி (102421ஏ). ஏ எமிலியானஸ் (102423ஏ).

இ. சவரியம்மா (102423 பி), கே. கனகசிங்கம் (102424ஏ), ரி. சின்னத்தம்பி (102425ஏ), ரி. தனலக்சுமி (102425பி), எஸ். சுப்பிரமணியம் (102427ஏ), எஸ். சுந்தரலிங்கம் (102429 ஏ), எஸ். சுந்தரலிங்கம் (102429பி), என். பரமநாதன் (102435ஏ), பி. லக்சுமிகாந்தி (102435பி), சி. நீலகுமாரி (102435சி).

கே. பூபாலசிங்கம் (102436 ஏ), பி. தலாஜினி (102436 பி), சி. மகேந்திரன் (102437 ஏ), வி. கபிரியாப்பிள்ளை (102438ஏ), என். என். இம்மானுவேல் (102441ஏ), ஆர். சிறிதரன் (102442ஏ), எஸ். மைதிலி (102412பி), ஆர். அன்ரனி (102446ஏ), ஆர். தங்கமுத்து (102448 ஏ), எஸ். பாலசுப்பிரமணியம் (102452ஏ).

எஸ். கமலாதேவி (102453 ஏ), எஸ். தங்கம்மா(102453 பி), ரி. செல்வராஜா (102454ஏ), பி. மங்கலராணி (102455ஏ), என். இளையதம்பி (102456ஏ), என். பத்மதேவி (102456பி), வை. ஞானதாசா (102457 ஏ), கே. மகேஸ்வரன் (102458ஏ), எஸ் கிருஷ்ணகுமார் (102460ஏ), பி நவரட்ணராஜா (102467ஏ).

எம். மதன் (102468 ஏ), பி. சின்னத்துரை (102472ஏ), டி. ஆர். ஜே பவானி (102473 ஏ), ஏ சந்திரகுமார் (102473 பி), கே. சோமலிங்கம் (102474 ஏ), கே. நிஷாந்தன் (102474 பி), வி ரவீந்திரகுமார் (102476 ஏ), ஏ. நல்லையா (102476 பி). எஸ். ராசமணி (102482 ஏ), பி. பாஸ்கரன் (102485 ஏ), பி. சந்திரா (102485 பி), ஆர். எச். றஜிநா (102485 சி), ரி ராசு (102487 ஏ), ரி பாலசுப்ரமணியம் (102489)ஏ) ஆர். தனபாலன் (102489 பி, வி. தனபாலன் (102489 ஏ), எஸ். தர்மலிங்கம் (102492 ஏ), டி. தவநேசன் (102492 பி), ஆர். கமலதேவி (102493 ஏ), ஆர். மாறன் (102493 பி),

சி. அன்னமீரா(102494ஏ), சி. அன்னமீரா (102494 பி), எம். குமாரசாமி(102495ஏ), எஸ். ஏ. ஜோசப் (102496ஏ), எஸ். சிவப்பிரகாசம் (102501 ஏ), வி. சிவப்பிரகாசம் (102501 பி), எஸ். மேரி (102503 ஏ), ரி. சதாநந்தன் (102503 பி), எஸ். கமலாவதி (102503 சி), எஸ். பவானி [102503 டி],


எஸ். குணரட்ணம்[102506 ஏ], பி. குணரட்ணம்[102506 பி], ஜி. சுகந்தி [102506சி], எம். லோறேன்ஸ் [102507 ஏ], எஸ். எம். கிறேசென்சியா [102507 பி], பி. பரமேஸ்வரி [102508 ஏ], பி. டிலுக்ஷா [102508 பி], எஸ். சங்கரப்பிள்ளை [102509 ஏ[, ஏ. சேனாதிராசா[102510ஏ], பி. சேனாதிராசா ]102510பி],

ஆர். தவராசா [102511 ஏ], எஸ். கனகசுந்தரம் [102514 ஏ], கே. பரமேஸ்வரி [102514பி], ஜே. சோமசுந்தரம் [102515] ஏ], எஸ். கௌரி (102515 பி), வி. சத்தியசீலன் (102517ஏ), என். தில்லைராசா(102517பி) எஸ். கனகரட்ணம் (102518 ஏ), ரி. மஞ்சுளா (102518 பி), பி. நம்பாமி (102518 சி).

எஸ். நாகமுத்து (102519ஏ) எஸ். இந்திரன் (104519 பி), ஏ. றூபசிங்க (102520ஏ), கே. கௌரியம்மா(102522ஏ), வி. தாரணி (102521 பி), எம் ராசம்மா (102521 சி) எஸ். ராமப்பிரியன் (102521 டி), ஜே. ஆர். விக்ரர் (102523ஏ), எம். எச். கமலியஸ் (102524 ஏ).

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**தாமோதரம்பிள்ளை சேனாதிராசா**

மண்ணில் 25-04-1949 — விண்ணில் 18-06-1999

வாழப்பிறந்த உயிர்கள்
வையகத்தில்
வாழாதுபோதல் முறையோ?
விதியின் பாதை அதுவானால்
விழுந்த வாழ்வு திரும்புமா?

உங்கள் பிரிவால் வாடித்தவிக்கும்
சகோதரி ச. நாகம்மா

'இரத்தின மகால்'
அம்மினிபாதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(67387)

---

பதிவு செய்யப்பட்ட சுமார் 1,000 நிலையங்களில்

## 581 சனசமூக நிலையங்கள் மட்டுமே நன்கொடைப் பணம் பெறுகின்றன

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் 581 சனசமூக நிலையங்களுக்கே 1999 ஆம் ஆண்டுககுரிய அரச நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

'அ' தரத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு ஆயிரம் ரூபாவும். 'ஆ' தரத்திலுள்ளவற்றிற்கு அறுநூறு ரூபாவும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 6 லட்சத்து 26 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

1998 ஆம் ஆண்டுக்கான நன்கொடைப்பணம் யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு இதுவரையும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் பிரதேச சபைகளின் கீழ் செயற்படும் சகல பொது நூலகங்களுக்கும் வழங்கவென இரண்டு லட்சத்து 28 ஆயிரம் ரூபாவும் — மகப்பேற்று, பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 314 ரூபாவும்— மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

[ஐ—5—180]

---

## கிராம அலுவலர் தரம்உயர்வுபரீட்சை

கிராமசேவை உத்தியோகத்தர்களை தரம் ஒன்றுக்கு உயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பத்துவருடகால சேவையைப் பூர்த்தி செய்து கொண்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள் தரம் ஒன்றுக்கு அமைத்திக்கப்படுவதற்கு இப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

(ஐ-152)

---

## வீட்டுக் கிரியைகளும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி தங்கத்துரை சாரதாவேணி

17—06—99 அன்று காலமாகிய எமது அன்பின் தங்கத்துரை சாரதாவேணி அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிரியைகளும் பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறையில் அமைந்துள்ள எமதில்லத்தில் நாளை [19—07—99] திங்கட்கிழமை நடைபெறும்.

இக்கிரியைகளில் பங்குபற்றுமாறு நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கத்துரை, பிள்ளைகள்
ஆதிமூலம், ஏரம்பமூர்த்தி,
தியாகலிங்கம், கிருஷ்ணபிள்ளை,
பஞ்சலிங்கம், ஆதித்தன்,
சேதுலிங்கம், எம். ஆர். ராஜ்மோகன்,
ஈஸ்வரலிங்கம்.

தகவல்:
இ. பஞ்சலிங்கம்
[கலைஞர் வட்டம்].

[சி/8209]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பாலச்சந்திரன் விஜிதரன் என்பவரது விசேட அடையாள அட்டையும் பாடசாலை அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்திற்கும் நவாலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குமரன் மில் நவாலிகிழக்கு, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(67527)

கந்தையா கோகிலவதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடைய எனது தேசிய (796780657 V), விசேட (0902007900) அடையாள அட்டைகள் நல்லூருக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(67493)

சோமசுந்தரம் செல்வகுமார் என்பவரது விசேட அ. அட்டை (இல. 0902038218) 15-07-99அன்று தட்டாதெரு சந்திக்கு அருகில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து34/7,லோட்டன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்

(67529)

## MATHS ENGLISH

O/L பரீட்சையில் Distinction Credit பெறுவோருடைய ஆரம்பத்திலிருந்து இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும் முதல் முறை தோற்றுபவர்களுக்கும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி

(67429)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதடி லேனில் $1\frac{1}{4}$ பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட கல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜேம்ஸ் மரியம்மா 2/2 மருதடி லேன், யாழ்ப்பாணம்.

(67546)

## வீடு வாடகைக்கு

இல. 6 கச்சேரி லேன், சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு உண்டு. கடிதமூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: K. வீரசிங்கம், சரசாலை மத்தி, சாவகச்சேரி. (இரண்டு பேர் விரும்பத்தக்கது).

(67522)

## FABRIC PRINTING

உடைகளில் வர்ண அலங்காரமிடும் பயிற்சி வகுப்பு. பிரஷ் மூலமும் அச்சுப்பதிப்பு மூலமும் பயிற்சி வழங்கப்படும். 109/2, சட்டநாதர் வீதி,[சட்டநாதர் கோயிலடி) நல்லூர். (67508)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 9 வருடமாக லண்டனில் வசித்து எஞ்சினியராக சித்தியெய்திய 1973 இல் பிறந்த 5' 6'' உயரமுள்ள மணமனுக்கு டாக்டர், கணக்காளர், பொறியியலாளர், பட்டதாரி போன்ற அழகிய மணமகள் தேவை. ஆஸ்திரேலியா, லண்டன் நகரில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம் குறிப்பு, படம் விவரத்துடன் தொடர்பு கொள்ளவும் பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும், இல. 915, மே/பா, உதயன்

(67532)

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 15-06-1964 மகம் நட்சத்திரம் கனடா பிரஜை அமெரிக்கா Floridaவில் தொழில் புரியும் 5 அடி 9 அங்குல மணமகனுக்கு அழகிய, நற்குணமுள்ள, பொருத்தமான மணமகள் அமெரிக்காவிலோ, கனடாவிலோ தேவை. முழு விவரத்துடன் நேரில் அல்லது கடிதமூலம் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இராமலிங்கம் 373 (651), நாவலர் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.

(67510)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடை முட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67505)

இறைச்சிக்கோழி புறோயிலர் கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(67535)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இயங்கக்கூடிய V W 1300 என்ஜின் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரவிராஜ், 77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 2469 . (67511)

நல்ல நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர் இலக்க Fiat – 124 Model கார் விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கப்படும். எந்த நேரமும்பார்வையிடலாம். தொடர்பு: இல 113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(67499)

# விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்படும் நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவற்குழி பலநோக்குக் கூ. சங்க மைதானத்தில் பாலர் பாடசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் ஆ. யூ. பிலிப் தலைமையில் நடைபெறும்.

இந்த விளையாட்டு விழாவில் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதோடு பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

(ஐ-17)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது பாடசாலையில் ஆசிரியராகவும்
பிரதி அதிபராகவுமிருந்து, யா/ அட்டகிரி
சைவ வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய

**திரு. வ. ராதாகிருஷ்ணன்**

அவர்கள்

BSc., Dip. in Ed., S. L. P. S, II, S. L. E. A. S. III

**தீவக வலயத்திற்கு உதவிக் கல்விப் பணிப்பாளராகப்** பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டி, அவர் சகல சிறப்புக்களையும் பெற்று வாழ வாழ்த்தி மகிழ்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ ஆனைக்கோட்டை
றோ. க. த. க. பாடசாலை. [67531]

# இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு
''வீர மகனே'' உங்களையும் வரவேற்கின்றோம்,

**இலங்கை இராணுவத்தின்**
**நிரந்தர பிரிவில்**
**சாதாரண சிப்பாய்களுக்கான**
**வெற்றிடம்**

### தேவையான அடிப்படைத் தகைமைகள்:

18 வயதிற்கு மேல் 28 வயதிற்கு உட்பட்டவர்கள் உயரம் 5 அடி இரண்டு அங்குலம், திருமணம் முடிக்காத இலங்கை பிரஜை குறைந்தது 8ஆம் வகுப்பில் (9ஆம் ஆண்டில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### தேவையான சான்றிதழ்கள்:

★ பிறப்பு சான்றிதழ் (மூலப்பிரதி)

★ கல்விச் சான்றிதழ்களுடன் பாடசாலையை விட்டு விலகிய சான்றிதழ், கிராம உத்தியோகத்தரின் நம்பிக்கைக் கடிதம் (6 மாதத்திற்குள் பெறப்பட்டவை.)

★ அரச அதிகாரிகள் இருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இரு அறிமுக சான்றிதழ்கள் (6 மாத காலத்திற்குள் பெறப்பட்டவை)

★ நம்பக்கூடிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம்.

### கொடுப்பனவுகள்:

மாதமொன்றுக்கான ஆரம்பக் கொடுப்பனவு:— 4080. 00 ரூபா

யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் திருமணம் முடிக்காத சிப்பாய் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு மேலாக 3470. 00 ரூபா வழங்கப்படும்.

யுத்தப் பிரதேசத்தில் [கஷ்ட] திருமணம் முடித்துக் கடமையாற்றும் சிப்பாய் ஒருவருக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலாக 5120. 00 ரூபா வழங்கப்படும்,

யுத்தம் நடைபெறாத பிரதேசத்தில் திருமணம் முடிக்காமல் கடமையாற்றும் சிப்பாய் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு மேலாக 1090. 00 ரூபா வழங்கப்படும்.

யுத்தம் நடைபெறாத பகுதியில் திருமணம் முடித்து கடமையாற்றும் சிப்பாய் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு மேலாக 2740. 00 ரூபா வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கு மேலதிகமாகத் திருமணம் முடித்த / முடிக்காதவர்களுக்கு இலவச சீருடைகள், உணவு, பிரயாண சலுகை, சுகாதார வசதிகள், தங்குமிட வசதிகள் போன்றவை செய்து கொடுக்கப்படும்.


**1999 - 08 - 09** ஆம் திகதி தொடக்கம் **1999 - 08 - 30** ஆம் திகதி வரையிலும் அரியாலை இராணுவ முகாமிலும், சாவகச்சேரி இராணுவ முகாமிலும் நேர்முகப் பரீட்சைகள் காலை 8 மணி முதல் 4 மணிவரை நடைபெறும்.

— இலங்கை இராணுவம்

இளைய தலைமுறை ... புதிய உலகம்...

(C/8223)

# நீங்காத நினைவலைகள்





அமரர்பொ. கனகரத்தினம்(J. P.) திருமதி க. ஞானரத்தினம்

| | | |
|---|---|---|
| 15 03. 1912 | மணி விளக்காய் | 05 . 02 . 1918 |
| 19 . 08 . 1998 | ஒளி விளக்காய் | 29 . 05 . 1997 |

நிமிர்ந்த நன்னடை, நிறைந்த மனவளம்,
சிறந்த செயல்வீரம், சிந்தனைத்திறம்,
காலத்தை உணர்ந்த கடமை, அன்பான பேச்சு,
தெளிந்த உணர்வு, சமூகத் தொண்டு,
இவையே நீங்கள் எம்மிடம் விட்டுச் சென்ற
காலத்தால் அழியாத **கருவூலங்கள்.**

மறைந்தாலும் நீங்கள் என்றும் எம் மனதில் நிறைந்திருப்பீர்கள்.

உங்கள் நினைவால் உருகும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'நிம்மதி'
தேவாலய வீதி,
சங்கானை.

(67523)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரசியல் அணுகு முறையை பின்பற்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு

## அமெரிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

சர்வதேச ரீதியான அரசியல் அணுகு முறைகளையும் கோட்பாட்டு நெறிகளையும் பின்பற்றியே இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

அமெரிக்க பிரண்டிஸ் பல்கலைக்கழகத்தின் இனத்துவக் கல்வி விரிவுரையாளர் கலாநிதி ரெஜிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இன நெருக்கடி பற்றிய பகிரங்கக் கலந்துரையாடல் ஒன்றில் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இனயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சர்வதேச ரீதியான அரசியல் கோட்பாட்டு நெறிமுறைகளைக் கையாளாது வெறுமனே ஒரு பக்கத் தீர்மானமாக அரசமைப்பை திருத்துவது மூலம் இதுவரை காலமும் இன நெருக்கடிக்கான தீர்வை ஏற்படுத்த முடியவில்லை.

பலஸ்தீனம், பிலிப்பைன்ஸ், எதியோப்பியா போன்ற நாடுகளில் இன நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காணப்பட்டதோ அத்தகைய அணுகு முறைகளைப் பின்பற்றிஇலங்கையின் இயல்புக்கேற்பசமூக, கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கக் கூடிய அரசமைப்பை ஏற்படுத்தலாம்.

இதனால் நாட்டின் இறைமைக்குக் குந்தகம் ஏற்படுமெனப் பெரும்பான்மை அரசியல் தலைவர்களும், மக்களும் கருதுவது தவறானதாகும்.

ஓர் இனத்தின் அடிப்படை உரிமைகளை மேம்படுத்தும் நிதி, நீதி, நிர்வாகம் போன்ற முக்கிய துறைகள் பன்முகப் படுத்தப்படுமானால் எவரும் தமது உரிமைகள் தொடர்பாக அச்சம் கொள்ள வேண்டிய அவசியல் ஏற்படாது.

இப்படி அவர் கூறினார்.

திருகோணமலை, வவுனியா, மன்னார், கண்டி, புத்தளம் ஆகிய இடங்களுக்குச் சென்று அரசியல் தலைவர்களுக்கு இது பற்றிய அரசியல் விளக்கத்தையும் இதற்கான அணுகு முறைகளையும் பற்றி தாம் விளக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

இணுவில் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி மரணமானதாக, சுன்னாகம் பொலீஸாரால் கடந்த புதன் கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அவரது மனைவியால் இனம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த தோமஸ் செபமாலை (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணையின் பின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (இ-15)

## மெய்வன்மைப் போட்டி

நாவற்குழி சிவமணி மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பூங்கா மைதானத்தில் பாடசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் பிலிப் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க. சுப்பிரமணியம் கலந்துகொள்வார். (இ-117)

# தங்கத்துடன் கைதான இளைஞன் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் மூலம் கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த போது காங்கேசன்துறையில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் கொழும்பு மத்திய விளக்க மறியற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வண்ணார் பண்ணை காரைக்காட்டு லேனைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சந்தானகோபால் (வயது 30) என்பவரே கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டவராவார்.

இவர் திருமலையில் இருந்து கப்பல் மூலம் வரும்போது 15 சிறிய தங்கக்கட்டிகளையும் நகைகளையும் கொண்டு வந்தார் எனவும் —

இவற்றைக் கொள்வனவு செய்ததற்கான றிசீற்களோ, இவற்றை எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியோ வைத்திருக்கவில்லை என்றும் — அதனாலேயே இவர் கைது செய்யப்பட்டார் எனவும் படையினரால் மனித ரிமைகள் ஆணைக் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6-12)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

இராமநாதன் நுண்கலைத் துறை இறுதிவருட மாணவர்களுக்கான ஒன்று கூடல் நாளை திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலய மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-69)

★ ★ ★

வடமராட்சி, ஜுலை 18

வரணி வடக்கு கறுக்காய் கந்தசுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (ஐ-173)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 18

மேலைப்புலோலி ஆலடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் இம்மாத 28 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். (ஐ-173)

★ ★ ★

குருநகர், ஜூலை 18

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் நேற்று முன் தினம் காலை நடைபெற்ற திருப்பலியின் பின்னர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஒன்பது நவநாள் ஆராதனைகளைத்தொடர்ந்துஇம்மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-51)

★ ★ ★

கொழும்புத்துறை எழிலூர் புனிதஅன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். (இ-30)

# இடம் மாற்றம் பெற்றுள்ள ஏனைய ஆசிரியர்கள் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து மேல் மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 51 ஆசிரியர்களில் ஒரு தொகுதியினரின் பெயர் விவரம் நேற்றைய சஞ்சீவியில் வெளியாகியிருந்தது.

அதன் மிகுதிப்பகுதி கீழே தரப்படுகின்றது.

### கிளிநொச்சி

★ திருமதி லலித்தா எபனேசர்—அக்கராயன் ம. வி.

★ செல்வி செ. கந்தையா—தருமபுரம் ம. வி.

★ திருமதி ச. கணபதிப்பிள்ளை — முரசுமோட்டை றோ. த. க. பா.

★ திருமதி உ. செல்வரத்தினம்—கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

★ நா. செல்வரத்தினம் — கிளிநொச்சி ம. வி.

### முல்லைத்தீவு

★ திருமதி சகுந்தலா சந்திரா—முல்லைத்தீவு ம.வி.

★ திருமதி நவயுகன் சரோஜினிதேவி — புதுக்குடியிருப்பு வள்ளிபுரம் கனிஷ்ட வி.

★ செல்வி ம.நீற்றாசுதேவி —மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.

★ லோறன்ஸ் ஜோர்ச் பிரேம்குமார்–மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.

★ செல்வி கிருஷ்ண மோகன் மாலதி — திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் ம. வி.

★ கந்தையா பசுபதிப்பிள்ளை — உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி.

★ செல்வி மேரிறஞ்சனி தோமஸ் செல்லத்துரை — வவுனியா தமிழ் ம. ம. வி.

★ திருமதி எஸ். புவனேஸ்வரி — கல்முனை விஸ்ணு ம. வி.

★ திருமதி ப. சிவயோகராசா — கல்முனை பாண்டிருப்பு ம. வி.

★ கே. கி. ஹைதர் —மன்னார் கொக்குப்படையான் றோ. க. த. க. பா.

★ என். எச். எம். ஐபப்கான் — மன்னார் முசலி ம. வி

★ கே. எம்.நலீம் — மன்னார் கரடிக்குளி முஸ்லீம் வித்.

### மட்டக்களப்பு

★ ஜனாப் அப்துல் காம் ஆதம் அலி — இணைப்பு உத்தியோகத்தர், மட்டக்களப்பு பிரதேச கல்வி அலுவலகம்.

★ திருமதி ஜனுல் றியாபா ஆதம் அலி — காங்கேயன் ஓடை ஹிஸ்புல்லா வி.

★ எம். எச். அப்துள் றகம் — மட்டக்களப்பு இக்றா வி.

★ செல்வி ஏ. ரீ. பிரான்சிஸ் — மட்டக்களப்பு புனித தெரேசா மகளிர் வி.

★ ஏ. எம். ஏ. ஜுனைத் — மட்டக்களப்பு — டாக்டர் அஹமட் பரித். வி.

★ செல்வி சுவர்ணமாகலா — மட்டக்களப்பு சம்மாந்துறை விநாயகர் வி.

★ அலெக்சான்டர் அஷ்லி — மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி.

(இ-9)

## தேவார ...

(6 ஆம் பக்கத் தொடர்)

வினாக்களுக்குத் தேவாரத் திருப்பதிகங்களைத் துணையாகக் கொண்டு விடை கூறுகிறார் நூலாசிரியர்.

சரியை, கிரியை, யோக மார்க்கங்கள், இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு பற்றிய விளக்கங்கள் இந்நூலில் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றன.

இந்நூலை எழுதியவர் மட்டுவில் ஆ. நடராசா. கந்தபுராணச் சிந்தனைகள் என்னும் நூலை எழுதியமைக்காக 1997 ஆம் ஆண்டு இந்துசமய கலாசாரத் திணைக்களத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் இவர்.

நூலாசிரியர் தேவாரத் திருப்பதிகங்களைச் சாறாகப் பிழிந்து, அதை மூவர் தமிழ் என்னும் [illegible] சேமித்து வைத்திருக்கிறார். நாட்டமுடையோர் பருகிப் பயன் பெறுவார்களாக.

★


## அம்பிகை அடியார்களுக்கு ஒரு வேண்டுகோள்

நிகழும் பிரமாதி வருடம் 4 ஆம் திகதி (20-07-99) தொடக்கம் 13 ஆம் திகதி (29-07-99) வரை மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் - துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் 10 நாள்கள் நடைபெறும்.

விசேடமாக 9 ஆம் நாள் (28 - 07 - 99) புதன்கிழமை

தீக்குளிப்பு வைபவமும் ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட் கலையுடன் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று துர்க்கா தேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தினம் தோறும் காலை 10.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.

சி. நவரத்தினம்
ஆலய தர்மகர்த்தா

அன்பளிப்பு:

மா. நாகரத்தினம் அன் கோ - கொமினிகேசன்
62, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(67557)



## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

லுமும்பா பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் துறைகளுக்கு அனுமதி பெற்றுத் தரப்படும்

(1) மருத்துவம் (2) பொறியியல்

விண்ணப்ப கடைசித் திகதி: 27-07-99

நேரம்: காலை 10. 00 — 1.00 மணி வரை

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நா. குணரட்ணம்

(—) செல்வா ஸ்ரோர்ஸ் (—)

இல. 2A, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(67533) தொலைபேசி இல. 3096


## மரண அறிவித்தல்

### சின்னையா கருணைலிங்கம்

(இளைப்பாறிய அரசாங்க அச்சக காசாளர்-சிறாப்பர்)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும், கொண்ட சின்னையா கருணைலிங்கம் 16-07-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா [ஆசிரியர்] — மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை [ஆசிரியர்]—நாகம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கனகாம்பிகை [ஜேர்மனி], துரைலிங்கம் [கனடா], பாலதேவி [அமெரிக்கா], நடராசா [லண்டன்] ஆகியோரின் சகோதரனும் சிறிஸ்கந்தகுமார் [ஜேர்மனி], அமுதகௌரி [மட்டுவில் தெற்கு], கணேசகுமார் [ஜேர்மனி], விஜயகௌரி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் றேணுகா [ஜேர்மனி] மகேசன் [மட்டுவில் தெற்கு], தேவகி [ஜேர்மனி], வசந்தன் [ஜேர்மனி] ஆகியோரின் மாமனாரும் அனோஜன், நிறோஜன் [ஜேர்மனி], அஜந்தன், மயூரன், சுலோசா, வினோஜன் [மட்டுவில் தெற்கு], விதுசன் [ஜேர்மனி] திரிதிகா, கோபிகன் [ஜேர்மனி] ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [18-07-99] ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மகேசன் அமுதகௌரி
[மகள்]

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[67550]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண வெட்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

மக்கள் தங்களில் தாங்களே தங்கியிருக்கும் நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர் நிவாரணம் நிறுத்தப்படுவதில் எங்களுக்கு கருத்துவேறுபாடு இல்லை என்பதை தெரிவிப்பதுடன் நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்க முடியாது என்பதையும் ஏற்றுக் கொள்கின்றோம்.

## மனிதாபிமானமற்ற செயல்

இன்றைய சூழலில் இந்த நிவாரண வெட்டை திடீரென அமுல் செய்வது மனிதாபிமானமற்ற செயலாகும்.

விரிவான புனர்வாழ்வுத் திட்டம் வகுக்கப்பட்டு மக்களுக்கு கொள்வனவுச் சக்தியை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்களை உண்டாக்கிய பின்னர் நிவாரண வெட்டை படிப்படியாக அமுல் செய்வதே சிறப்பானது.

மக்களுக்கு கொள்வனவுச் சக்தியை உன்டாக்கக் கூடிய அர்த்தமுள்ள நடவடிக்கை எதுவும் கடந்த மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கையைப் பொறுத்தமட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் போட்டி போட்டு தொழில் செய்யக்கூடிய நிலை உண்டாக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அவ்வாறான நிலை இல்லை. பல கட்டுப்பாடுகளினால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரமாக உள்ளது. அதனால் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களுடன் யாழ்ப்பாணத்தை ஒப்பிட முடியாது.

## தொழில் வாய்ப்பு இல்லை

பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்தை நிறுத்துவதற்குதேவையான வருமானத்தைப் பெற தொழில் அவசியமானது. அத்தகைய ஒரு தொழிலைப் பெறுவதற்கான சாதகமான சூழ் நிலையை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை உருவாக்குவது அரசினுடைய கடமை ஆகும்.

பாதுகாப்பு காரணம்என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளினால் தொழில் வாய்ப்புக்கான சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்த முடியாமலிருக்கின்றது.

1996 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையிடம் புனர்வாழ்வுத் திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இந்த அதிகார சபை குறிக்கப்பட்ட நோக்கத்தை அடைவதில் தோல்வி கண்டுள்ளது.

முன்னுரிமைகளை குறிப்பிட்டு ஒரேநேர அட்டவணையின் பிரகாரம் ஒரு விரிவான புனர்வாழ்வு திட்டம் ஒன்றை அதிகாரசபை இன்னும் தயாரிக்கவில்லை.

அதிகாரசபை தான் வகுத்த திட்டங்களை உகந்த முறைப்படி நடைமுறைப்படுத்தக் கூடிய தந்திரோபாயம் எதையும் விருத்தி செய்யவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த போது இதனை அவருக்கு சுட்டிக் காட்டினோம்.

வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை கடந்த மூன்று வருடங்களாக மேற்கொண்ட திட்டங்களின் அடிப்படையில் நிவாரணத்தை நிறுத்துவது எந்த விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியது அல்ல.

ஆகையால் இந்த நிவாரண நிறுத்தத்தை மறு பரீசீலனை செய்யுமாறு வேண்டுகின்றோம்,

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-6)


## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

கோப்பாய் வடக்கு அம்மன் கோயிலடி
சனசமூக நிலைய கட்டட வளர்ச்சி நிதிக்காக
மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி நடைபெறவுள்ளது.

இடம்:- நீர்வேலி சவாரித்திடல்

காலம்:- 01-08-99

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோயிலடி சனசமூக நிலையம்,
கோப்பாய் வடக்கு.

(சி/8220)



## 'விருட்சம்'
## இதழ் 4
## சஞ்சிகை வெளியீட்டு விழா

இடம்: முகாமைத்துவ மண்டபம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

காலம்: 19-07-1999 திங்கட்கிழமை
பி. ப. 2.30 மணி (இலங்கை நேரம்)

அனைத்து மாணவர்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(67524)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புலிகளின் அச்சத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

பரிசீலனை செய்யவேண்டும் என்று ஸ்ரீலங்கா இராணுவம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுத்த வேண்டுகோள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் பதிலளிக்கவேண்டி உள்ளது.

மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாங்குளம் ஊடாக ஒரு பாதையைத் திறக்கும் நீடித்த முயற்சி இதனால் தாமதமடைகின்றது என்பதனைச் சொல்ல வேண்டியதில்லை. ஸ்ரீலங்கா இராணுவம் தெரிவித்த பல பாதைகளில் விடுதலைப் புலிகளே மாங்குளம் பாதையைத் தெரிவுசெய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் உள்ள ஊடகங்களுக்கு அனுப்பிய ''பாக்ஸ்'' மூலமான பத்திரிகை அறிக்கையில் பொதுமக்கள் பாதுகாப்புவலயத்தை உருவாக்கும் உண்மையான விவகாரத்தில் இருந்து கவனத்தை வேறு திசைக்குத் திருப்ப முயன்றுள்ளது. அதன் மூலம் உள்நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் தப்பான எண்ணம் கொள்ளச் செய்துள்ளது.

''விடுதலைப் புலிகள் தமது தற்போதைய முன்னரங்க பாதுகாப்பு நிலைகளில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் வாபஸ் பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின்யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்'' என்று அந்தச் செய்தி அறிக்கை கூறுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் மாங்குளத்தில்5கிலோ மீற்றர்தூரத்தைஉள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா இராணுவம் தெளிவுபடுத்தி இருந்தது. அதாவது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கூடுதலான 140.2 மைல் கல்லில் இருந்து என்பதாகும். ''விடுதலைப் புலிகள் தமது தற்போதைய முன்னரங்க நிலைகளிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் வாபஸ் பெற வேண்டும்'' என்று கூறுவது முழுக்க முழுக்கத் தவறான கருத்துக்கு இட்டுச் செல்வதாகும் என்பது மிகத் தெளிவாகிறது.

''பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் உருவாக்கும் திட்டம் பாரதூரமான தந்திரோபாயங்களையும் பாதகமான இராணுவச் சிக்கல்களையும் கொண்டது'' என்று விடுதலைப் புலிகள் சொல்கின்றனர் தாங்கள் தற்போது நிலைகொண்டுள்ள பாதுகாக்கப்பட்ட நிலைகளில் இருந்து பல மைல்கள் வாபஸ் பெறுவது ''ஏ—9'' பெரும் பாதை நோக்கி இராணுவம் நகர்வதற்கான புதிய செயலுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்றும் விடுதலைப் புலிகள் தெவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை உருவாக்கும் யோசனை, பொதுமக்களுக்கு கஷ்டங்களைக் கொடுக்கக் கூடிய மோதல்களைத் தவிர்க்கும் / இயன்றளவு குறைக்கும் தேவையை மனதிற் கொண்டே வகுக்கப்பட்டது என்பதனை ஸ்ரீலங்கா இராணுவம் மிகத் தெளிவுபடக் கூறியிருந்தது.

250 சதுர மீற்றர் கொண்ட ''யாருமற்ற சூனியப் பிரதேசம்'' ஒன்றை நிறுவும் விடுதலைப் புலிகளின் திட்டம் பொதுமக்களின்பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதற்குச் சிறிதளவும் போதாது என்பதனை ஸ்ரீலங்கா இராணுவம் வலியுறுத்தி இருந்தது. அது உதைபந்தாட்ட மைதானம் ஒன்றின் அரைவாசியாகவே இருக்கும்.

இது போன்ற சூழ்நிலையில் உள்ள வேறு எந்த இராணுவத்தையும் போலவே ஸ்ரீலங்கா இராணுவமும் பொது மக்கள் பாதுகாப்பு வலயம் குறித்து ஆலோசனையைத் தெரிவித்த போது தான் அறிவித்த இராணுவ சிக்கல்களையும், பாதகங்களையும் முற்றாக உணர்ந்திருந்தது. இருப்பினும் பொதுமக்களின் இன்னல்களை மனதிற்கொண்டு, இராணுவச் சிக்கல்களைப் பொருட்படுத்தாது அந்த யோசனையை முன்வைத்தது.

புலிகள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தற்பொழுது நிலை கொண்டுள்ள இடத்தில் இருந்து பல மைல்கள் தூரம் பின்னால் செல்ல வேண்டி வரும் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். உத்தேச பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் 5 கிலோ மீற்றர் தூரம் உடையது மட்டுமே. பல மைல்கள் என்று தெரிவிப்பது தவறாக இட்டுச் செல்லும் நோக்கம் கொண்டது.

பாரதூரமான தந்திரோபாயங்களும் பாதகமானஇராணுவ சிக்கல்களும் இருப்பதாகவும்—

'ஏ—9' நெடுஞ்சாலை ஊடாகப் படையினர் முன்னேறுவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் தூண்டுதலாக இருக்கும் என்றும்—புலிகள் தெரிவித்திருப்பது பயனற்ற நிலையில் நடத்தும் விஷமப் பிரசாரம் ஆகும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் உள்நாட்டு வெளிநாட்டு சமூகங்களினால் வரவேற்கப்பட்ட ஒன்றாகும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் முன்வைக்கப்பட்ட யோசனை என்ற அடிப்படையில் பாதை திறப்பது தொடர்பான தனதுவாக்குறுதிகளுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் மதிப்பு அளிக்கும்.

ஆனால் புலிகளின் அச்சத்தை நீக்குவதற்கு எந்த விதமான உத்தரவாதத்தையும் அளிக்க ஸ்ரீலங்கா இராணுவம் தயார் இல்லை. பிரிவினைவாதிகளுக்கு எதிராக யுத்தம் செய்யும் ஸ்ரீலங்கா இராணுவம் பாரதூரமான தந்திரோபாயங்கள் குறித்தும் இராணுவச் சிக்கல்கள் குறித்தும் புலிகள் கொண்டுள்ள அச்சத்தை நீக்கஉத்தரவாதம் அளிக்கும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

- பொன்மனச் செல்வன்
- தாய் நாடு
- பாட்டுக்கு ஒரு தலைவன்
- கோட்டை வாசல்
- தங்க மனசுக்காரன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(சி/8226)



## ரெலிபோன் விற்பனைக்குண்டு

- பனசோனிக் ரெலிபோன் 1 LINE
- பனசோனிக் ரெலிபோன் 2 LINE

K. S. M.
தொலைத் தொடர்பு நிலையம்
146, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

(67560)


# வெள்ளை...

[முதலாம் பக்கத் தொடர்]

சைக்கிளில் வந்த தமது கணவனை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்திச் சென்றதாக அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தமது கணவன் காணாமல் போனது தொடர்பாக இவர் ஏற்கனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# போக்கு வரத்துப் ...

(முதலாம் பக்கத் தொடர்)

றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில், கடந்த 26-06-99 இல் இருந்து மக்கள் மிகவும் நெருக்கடியான வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

தற்போது வன்னியில் உணவு, மருந்து, குழந்தைகளுக்கான பால் மா போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அவசர சிகிச்சை பெற வேண்டிய பல நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வன்னிக்குவெளியே கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் போதிய வைத்திய சிகிச்சை பெற முடியாமல் பலர் இறந்துள்ளனர். அத்துடன் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

போக்குவரத்துப் பாதை ஒன்றை திறப்பது அவசியம் என்பதால், ஸ்ரீலங்கா அரசினால் வன்னிக்கான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றாகச் சிபார்சு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் கண்டி வீதியை திறப்பதற்கு எமது சம்மதத்தைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடாக ஸ்ரீலங்கா அரசுக்கு 1 - 7 - 99 அன்று தெரியப்படுத்தியிருந்தோம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு புலிகளால் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனைகளைப் போட்டு பாதை திறப்பு விவகாரத்தை வேண்டுமென்றே இழுத்தடித்து வருகின்றது.

பலதடவைகள் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் போக்குவரத்துப் பாதை திறப்பது தொடர்பான எமது ஆர்வத்தையும் விருப்பத்தையும் தெரியப்படுத்தியபோதும் ஸ்ரீலங்கா அரசு இதுவரை பாதை திறப்பதில்தான் போட்ட முன் நிபந்தனைகள் தொடர்பாக கடும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

இந்த நிலையில் வன்னி மக்களின் தற்போதைய நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே உணவு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருள்களை கொண்டு வருவதற்காகவும் அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்களை வன்னிக்கு வெளியே எடுத்துச் செல்வதற்காகவும் பயன்படுத்தப்பட்ட மன்னார் உயிலங்குளம் பள்ளமடு வீதியைத் திறப்பதற்கு அல்லது யாழ்ப்பாணம் கண்டி வீதியைத் திறப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

உலகில் எந்த மூலையிலும் மனித உரிமைகள் மீறப்படும் போது — மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நிகழ்கின்றபொழுது—சிறுபான்மை இனங்கள் அடக்கி ஒடுக்கப்படும்பொழுது — தலையிட்டும் குரல் எழுப்பியும் துன்பப்படும் மக்களின் துயர் துடைக்க முன்வருகின்ற சர்வதேச சமூகமும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களும், இந்த மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையில் தலையிடவேண்டும்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-க-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org